Per B326
v. 3. No 9
Sep 1930

3L
R6730211, N28
N30 3.9.
187146

1392

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 9.

OFFICE OF THE ... 17 SEP 1930

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு புரட்டாசித் திங்கள் 1930ஆ செப்டம்பர்மீ | இதழ் ௯ |

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சிவஞானபோத விளக்கம் ... | ... ௧அ௫ |
| திருக்குறளிற் காணப்பெறும் சமயவுண்மைகள் | ... ௧௯௧ |
| ஓவியக் காட்சி ... .... | ... ௧௯௭ |
| திருத்தொண்டத் தொகை யாராய்ச்சி ... | ... ௧௯௯ |
| திலகவதியார் சரிதத்தின் அரும்பொருள்கள் | ... ௨0௪ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0.  1930  வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# வெள்ளிவிழா

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவைக் குறித்து மகிழ்வுறு வெள்ளிவிழா, சமாஜத்திருத்தொண்டர் திருமிகு நாராயண சாமி நாயுடு அவர்கள் திருமணச் சார்பாக (29, 30-8-30) வெள்ளி, சனிக்கிழமை களில் தென்னாற்காடு ஜில்லா கிழக்குமருதூர், 'திருச்சிற்றம்பல இல்லத்'திற் கொண்டாடப் பெற்றது. முதல் நாள் வெள்ளிக்கிழமை "நவசக்தி" ஆசிரியர் திருவாளர்-திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில், பண்டிதை அசலாம்பிகை அம்மாள் அவர்கள் "கற்பினுக்கணி" எனும் பொருள்பற்றி யும், சமாஜக் காரியதரிசியும், "சித்தாந்தம்" ஆசிரியருமான திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் "சித்தாந்தம்" எனும் பொருள்பற்றியும் சொற்பொழி வாற்றினர்கள். இரண்டாம் நாள் சனிக்கிழமை தாகூர் சட்ட விரிவுரையாளர் - திருவாளர் - கா. சுப்பிரமணியம் பிள்ளை எம், ஏ., எம். எல். அவர்கள் தலைமையில், திருக்குறள் விளக்க ஆசிரியர் திருவாளர் - கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "இல்லறம்." எனும் பொருள்பற்றியும், திருவாளர் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள் "சைவ சமய மும் நாகரிகமும்" எனும் பொருள்பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்கள்.

---


# தாயுமான சுவாமிகள் பாடல்

## அடக்கவிலைப் பதிப்பு

தாயுமான சுவாமிகள் பாடல் முழுவதும் அவசியமான இடத்தில் சந்தி பிரித்து நல்ல கிளேஸ் கடிதத்தில் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது. பாட்டு முதற் குறிப்பு அட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஏக காலத்தில் 12-புத்தகங்கள் வாங்குவோருக்கு
12 % கழிவு தரப்படும்.

தனிப் பிரதி விலை அணு 4.

தபால் செலவு முதலியன வேறு.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.



OFFICE OF THE
17 SEP 1930



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன்! ஆறுமுகன் அம்பிகை! பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு புரட்டாசித் திங்கள் 1930 ௵ செப்டம்பர்மீ | இதழ் ௯ |
|---|---|---|


## சிவஞானபோத விளக்கம்


[உதவி பத்திராசிரியர் கி. குப்புச்சாமி முதலியார்]


### மூன்றாஞ் சூத்திரம்

பிரமாண இயலில் கடைசிச் சூத்திர மாகிய இச்சூத்திரம் பசு உண் டென்பதற்குஅநுமான அளவையால் பிரமாணங் கூறுவதாகும். "முதற்சூத் திரத்துள் 'அவனவளது' வென் றும் இரண்டாவது சூத்திரத்துள் 'அவையே' என்றும் நீவிர் கூறு கின்ற உயிர்கள் உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை? உயிர் என்பது ஒன்று உள்ளது என்று யான் உணர் வதற்கு ஒன்றுங் காணேன். உயிர் என்பது ஒரு சூனியமாகத்தான் உள் ளது" என்று சூனிய ஆன்மவாதி முதல் எட்டு ஆன்மவாதிகள் எழுந்த னர். அவராவார் சூனிய ஆன்மவாதி, தேகான்மவாதி, இந்திரிய ஆன்மவாதி அந்தக்கரண ஆன்மவாதி, சூக்கும தேக ஆன்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞான ஆன்மவாதி, சமூக ஆன்ம வாதி என்பவராவர். இவருள் அந்தக் காண ஆன்மவாதிக்கு நான்காஞ் சூத் திரத்துள் உயிரின் இலக்கணத்தை வகுத்துக் காட்டுகின்றாராதலால்,

"உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினையின்மையி னுணர்த்தவுணர்த
மாயாவியந்திர தனுவினு ளான்மா" [லின்

என்று இச்சூத்திரத்துள் எழுவர் மதங் களைக் கண்டித்து, உயிர் உண்டென் பதற்குப் பிரமாணங் காட்டுகின்றனர். அதாவது, சூனியான்மவாதி, ஆன்மா இல்லை யென்பதால், 'ஆன்மா உள் ளது' என்று அவனது வாதத்தையே கொண்டு, 'இலது என்றலின் உளது' என்றனர். இதற்குப் பொருள் என்னை யோ வெனின் "ஓ! சூன்ய ஆன்மவாதி யே! நீ உடல், பொறி, விடயம் ஆகிய

எல்லாவற்றையும் ஒன்றென்றாகக் கூறி இது ஆன்மா அல்லை; இது ஆன்மா அல்லை என்று மறுக்கின்றாயே; அவ்விதம் மறுப்பதற்கு ஓர் அறிவுண்டன்றே! அவ்வறிவே ஆன்மா என்று கூறுவது" என்று கூறினர். அது கேட்ட வாதி, "அவ்விதம் இல்லை இல்லை என்று கூறுகின்ற அறிவும் சூனியம்" என்றனதலால், அவனை நோக்கி, "நீ கூறும் பிரமாணம் என்னைப் பெற்ற தாய் மலடி என்பது போலுள்ளது. ஓ! அறிஞனே! நான் கூறுவதைக் கேள்" என்று,

> " அன்றன்றென நின்றனைத்தும்
> விட்டஞ் செழுத்தாய்
> நின்றொன் றுளதுவே
> நீயனைத்து—நின்றின்று
> தர்ப்பணம் போற்காட்டலாற்
> சார்மாயை நீயல்லை,
> தற்பரமு மல்லை தனி "

என்னும் வெண்பாவை யருளினர்.

இதன் பொருளாவது, உடம்பு முதலாகிய எல்லாவற்றிலும் அதுவது தானாக நின்று முறையாகவே இது நானல்லை, இது நானல்லை என்று ஒன்றொன்றாகப் பார்த்து நீக்கிய விடத்தே அவ்விடத்து அகர முதலாகிய சூக்கும பஞ்சாக்கிர ரூபமாய் அறிந்து வந்ததோர் அறிவு நிலை பெற்றிருப்பதல்லையோ! அவ்வறிவே நீயாவாய். அவ்வறிவும் நானல்லை என்பாயானால் வரம்பின்றியோடும். அவ்விதம் வரம்பின்றியோடுவதற்கில்லை மேற் சூத்திரங்களில் சிவமும் பாசமும் அன்றோ கூறியது! அச்சிவமும் பாசமுமே இவ்விதம் அதுவல்லை, அதுவல்லை என்று நீக்கியதாகும் என்று கூறுவாயானால் நீ சிவமுமல்லை; மாயையுமல்லை. ஆனால் நீ தனித்த பொருள் ஆவாய் என்று சூனிய ஆன்மவாதிக்கு அவன் இல்லை

187146

யென்கின்ற வாதத்தைக் கொண்டே ஆன்மாவுள்ளது என்றனர். இனி இரண்டாவது தேகான்மவாதி எழுந்து "ஓ! சித்தாந்தியே! நீர் கூறுகின்ற அவ்வறிவு உடம்பின் கண்ணல்லாது வேறு எங்கும் நிகழ்வது காணமையாலும், 'நான் இளைத்தேன், நான் பருத்தேன்' என்று உலகத்தவர் உடம்பினையே நானென்று வழங்குவதைக் காட்சியளவையாகப் பார்க்கின்றேன் ஆதலாலும் உடம்பே ஆன்மா" என்று கூறினன். அவனுக்குப் பதில் கூறுவார், 'நான் இளைத்தேன்; நான் சிறுத்தேன்; நான் கருநிற முடையேன்; நான் பார்ப்பான்' என்று உடம்பினது குண விசேடங்களை யுபசாரமாக உயிருக்கு ஏற்றி உலகத்தார் வழங்கினாலும், 'நான் உடம்பு நான் கை நான் கால்' என்று உடம்பை வழங்குவாரில்லை. 'என்னுடைய கை; என்னுடைய கால்; என்னுடைய உடம்பு' என்று வேற்றுமைப் படக் கூறுகின்றாரேயன்றி ஒற்றுமைப் படக் கூறுவதைக் காணோம். உலகத்தார் தன்னின் வேறாகிய பொருள்களை 'என்பதி, என்மனை' என்று கூறுவதுபோல் 'என் கை என் கால்' என்று கூறுவதால் அவ்விதங் கூறி நிற்பது எதுவோ அதுவே ஆன்மாவாம் என்று சாதிப்பார்,

> "எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
> துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
> மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
> ணுன்னிலவை வேறா முணர் "

என்று கூறினர். இதன் பொருளாவது, ஓ! தேகான்மவாதியே! நீ நாத்திக நூலாகிய உலகாயத நூல் கேட்பதற்கு முன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப் பொருள்களையே உயி



ரெனக் கொண்டு மயங்கி நின்றாயன்றோ! அவ்விதம் மயங்கி யிருந்த காலத்து அப்பொருள்களை எனதல்லை என்று வேறு காண்பதற் கில்லாது தனித்தனியாக என்னுடையதென்றே ஒற்றுமைப்பொருள்கொண்டு சொல்லி வந்தனை யன்றோ! அதுபோல, உடலுக்கு உரியனவாய் உயிருக்கு உரியன வல்லாத கைகால் முதலியவைகளைத் தனித்தனி என்னுடையது என்றும், அவ்விதம் அறிந்த பாச அறிவை என்னுடைய அறிவென்றும் ஒற்றுமைப் படக் கூறிக்கொண்டு நீயொருபொருள் வேறு நிற்கின்றாய்; நீ உண்மை நூல் உணர்ந்த பிறகு பார்ப்பாயாயின் பதி மனை முதலிய பொருள்கள் உனக்கு வேறாய் நிற்பனபோல் கைகால் முதலிய தேகமும் உனக்கு வேறென்று உணர்வாய். ஆதலால் தேகம் ஆன்மா வல்லை; தேகத்திற்கு அன்னியமாக ஆன்மா ஒன்று உண்டு என்று பிரமாணங் கூறுவார், 'எனதுடல் என்றலின் உளது' என்றனர் என்று இவ்விதம் தேகான்மவாதியை மறுத்தபிறகு, இந்திரிய ஆன்மவாதி, 'தேகம் ஆன்மா அல்லை என்பதை ஒத்துக்கொள்ளுதல் கூடும். ஐம்பொறிகள், ஐம்புலன்களை யறியுமென்றல் யாரும் மறுத்தற்கின்மையால் அவையே உயிராகும்' என்று கூறினான். அவ்வாதியை நோக்கி, "ஓ! இந்திரிய ஆன்மவாதியே! இந்திரியங்கள் ஐம்புலனாகிய சத்தபரிசரூப ரசகந்தங்களையும் அறிவது உண்மையேனும் ஒவ்வோர் இந்திரியம் ஒவ்வோர் புலனை யறிவது கூடுமேயன்றி ஒரு புலன் எல்லாவற்றையும் அறிவதற்கு இல்லை. இவ்வைம் புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஒன்று உள்ளதாதலின் அவ்விதம் அறிகின்ற ஒன்றே அவ்வான்மாவாம்" என்று கூறி அதைச் சாதித்தற்கு,

> " ஒன்றறிந்த தொன்றறியா
> தாகியுடன் மன்னி
> யன்றும் புலனாய
> வஞ்செழுத்தை—யொன்றறித
> லுள்ளதே யாகிலது
> நீதனித் தனிகண்
> டுள்ளலவை யொன்றல்லை யோர் "

என்ற வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது உடம்பினிடத்தே நிலைத்து ஒரு விடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை யறிவதாகி அவ்விதம் ஒன்று அறிந்தது மற்றொன்றும் அறியாததாய் தம்முள் வேறுபடுகின்ற சத்தம் முதலிய புலன்கள் சூக்கும பஞ்சாக்கரத்தால் செலுத்தப் பட்டு ஆராய்ந்து அறிகின்ற அவ்வைம்பொறிகளின் தொழிற்பாட்டைக் கண் உருவத்தை யறிவது, பொறி ஓசையை யறிவது என்று இவ்விதம் பகுத்துணர்கின்ற ஒரு பொருள் உண்டு. அவ்வாறு உணர்வதாகிய அப்பொருளே நீ யாகிய ஆன்மா; அன்றியும், அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை வேறு வேறாகக்கண்டு அறிவது மாத்திரமே யல்லாமல் இவ்விதத் தொழிற்பாட்டை யான்செய்கின்றேன் என்ற உணர்வு இல்லாமையால் அவ்விந்திரியங்கள் தொழிற்பாடு யாவற்றையும் அறிந்து அவற்றால் பயன்களை யறிந்து கொள்ளும் நீ அவ்விந்திரியங்களுக்கு வேறாவாய் என்று இந்திரிய ஆன்மவாதியை "ஐம்புல னறிதலின் உளது" என்று மறுத்தவாறாயிற்று.

இவ்விதம் இந்திரிய ஆன்மவாதியை மறுத்த பிறகு சூக்குமதேக ஆன்மவாதி, "இந்திரியங்கள் ஆன்மாவல்லை; ஆனால் சூக்குமதேகமே ஆன்மாவாகும். அதுவே புரியட்டக உடம்பென்றும்

கூறுவர். அதாவது தன்மாத்திரைகளாகிய ஐந்தும், மனம் புத்தி அகங்காரம்என்கின்றமூன்றும் ஆகிய எட்டினுலும் ஆக்கப்பட்ட உடம்பு" என்றனன். அவனைமறுப்பதற்கு "ஓ! சூக்கும தேகான்மவாதியே! ஐம்பொறிகளும் ஒடுங்கி நின்ற சொப்பனவத்தையில் நிகழ்ந்த காரியங்களை யறிகின்ற ஒன்று உள்ளதாதலால், நீ கூறுகின்ற சூக்கும தேகத்திற்கு வேருக ஆன்மா ஒன்று உண்டு; அது எவ்விதமோ வெனின், சொப்பனம் ஒழிந்து சாக்கிரம் என்கின்ற நனவோடு கூடிய காலத்து இக் கனவைக் கண்டோம்; இக்கனவைத் தூங்குகின்ற காலத்துக் கண்டிலம் என்று பிரித்து உணர்வதாகிய ஓர் அறிவு உண்டன்ருே; அதுவே அவ்வான்மாவாகும்" என்று,

"அவ்வுடலி னின்றுயிர்ப்ப
வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற்
சென்றடங்கி—யவ்வுடலின்
வேறென்று கொண்டு
விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று"

என்ற வெண்பாவைக் கூறினர். இதன் பொருளாவது, மேல் உயிரல்லை என்று கூறிய தூல வுடலினின்றும் உயிர்ப்பதைச் செய்யும் ஐம்பொறிகள் அவ்விடத்து உயிர்ப்பு இல்லாது கிடப்பவும், அவ்விதம் அவை உயிர்ப்பில்லாது கிடந்தவிடத்து புறத்தே யுண்டாகும் தொழில்களெல்லாம் அடங்கி, அவ்வுடம்பினுள்ளே வருத்த மில்லாமற் போய் அத்தூலவுடம்புபோல அதற்கு வேருகிய ஓர் உடம்பை யெடுத்து கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் விளையாடி மறுபடியும் அத்தொழிலினின்றும் மாறி மேல் செல்லுதலால் நீ அந்த சூக்கும தேகமல்லை; அதற்கு வேருக ஒன்ருவாய் என்று சொப்பனத்தில் நிகழும் இயல்பினை யெடுத்துக் காட்டிச் சூக்கும தேகத்திற்கு வேருக உயிர் உண்டு என்று சூக்கும தேகான்ம வாதியை "ஒடுக்க மறிதலின் உளது" என்று மறுத்தவாருயிற்று என்பதாம்.

இவ்விதம் சூக்கும தேகான்ம வாதியை மறுத்தவுடன் பிராண ஆன்மவாதி யென்பான் எழுந்து, "சூக்கும தேகம் சொப்பனத் தானத்தில் மாத்திரம் தொழிற்படுவது என்கின்ற தகுதியால் அது ஆன்மாவல்லை என்பது அமையும். ஆயின் பிராண வாயுவோ சுழுத்தி துரியங்களிலும் அடங்குதல் விடுதல் என்கின்ற தொழில்களைச் செய்து நிற்பதால் அதுவே ஆன்மாவாகும்" என்று கூறுதலும், அவனைநோக்கி, "அவ்விதம் நித்திரையினிடத்து இன்பதுன்பங் காணுதல் இல்லாமையால் நனவினிடத்து இன்ப துன்பங் காண்கிருய். அவ்விதம் காண்கின்ற அறிவே ஆன்மா" என்றனர். அதாவது நனவினிடத்து உள்ளதுபோல் உறங்குங் காலத்தும் ஓரே விதமாக அசைதல் பிராண வாயுக்கு உண்டு என்ருலும், இன்ப துன்பம் அறிவதற்கு நனவினிடத்தே உண்டாகுஞ் செயல்கள் உறக்கத்தில் இல்லையாதலால் அவ்வித இன்பதுன்பங்களை யறியும் அறிவே ஆன்மா என்றதாயிற்று. அவனைத் தெளிவித்தல் கருதியே,

"கண்டறியு மிவ்வுடலே
காட்டொடுங்கக் காணுதே
யுண்டிவினை யின்றி
யுயிர்த்தலாற் கண்டறியு
முள்ளம் வேறுண்டா
யொடுங்காதட னண்ணி
லுள்ளதா முண்டிவினை யூண்"

என்னும் வெண்பாவைக் கூறினர்.



இதன் பொருளாவது: கண்டு அறிவதற்கு நிலைக்களமாகிய இவ்வுடம்பினிடத்தே காண்கின்றனவாகிய கருவி தொழிற்படாது ஒடுங்கிப் போகவும், அது ஒடுங்கிய விடத்து உண்டியுந் தொழிலும் தேகத்திற்கு இல்லாமற் போகவும், பிராணவாயு நிலையாக அசைதலால் கண்டு அறியும் தன்மையுடைய உயிர் பிராணவாயுக்கு வேருக உண்டு. அவ்வுயிர் ஒடுங்காது அவ்வுடலினிடத்தே அடைந்ததாயும் அவ்வுடம்பு கருவிகளின் தொழிற்பாட்டாலாகிய உண்டியும் வினையும் உடையது ஆகும். அதனை நீ ஆய்ந்து அறிவாயாக என்று பிராணன்ம வாதியைக் "கண்படில் உண்டி வினையின்மையின் உளது" என்று மறுத்தவாருயிற்று.

பிராணன்ம வாதியை மறுத்தலும், விஞ்ஞான ஆன்மவாதிப் "பிராண வாயு ஆன்மாவல்லை என்பது உண்மையேயாம்; ஆயின் பிரமமாகிய பொருள் மேற்சொன்ன சடப்பொருள்கள்போலல்லாது சித்துப் பொருள்களாக இருத்தலால் அப்பிரமமே உயிர் என்றுசொல்ல அமையும்" என்று கூறினுதலால், "ஓ! பிரம்ம ஆன்மவாதியே! அறிவிக்க அறியுந் தகுதியுடையதாக இருத்தலால் நீ கூறும் பிரமம் அறிவிக்க அறிய வேண்டுவதில்லை; ஆதலால் பிரமம் ஆன்மாவாகாது. ஏனெனின், கருவிகளோடு கூடியவிடத்தும் தன் தன்மை இது வென்று உணராத ஆன்மாவைப்போல அம் முதல்வனுகிய பிரமம் மறந்து மறந்து அறிதலில்லாமல் அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடைய வனுதலால், பிரமம் ஆன்மாவாகாது என்பது தெரிவிக்க,

"அறிந்து மறிவதே யாயுமறியா
தறிந்ததையும் விட்டங்கடங்கி—யறிந்த
தெதுவறிவு மன்ருகு மெய்கண்டா னென்றி
னதுவது தானென்னு மகம்."

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, கருவிகளெல்லாவற்ருேடுங் கூடிச் சாக்கிராவத்தையிலிருந்து அதாவது நனவோடு கூடியிருந்து விடயங்களை யறியுமிடத்தும் எல்லாவற்றையும் ஒன்ருக அறியமாட்டாது, ஒவ்வோர் முறை ஒவ்வொன்றையே அறிந்தும், ஒன்றனை யறியுமிடத்து முன் அறிந்த ஒன்றனை மறந்தும், அறிந்த விடயங்களையும் எக்காலத்தும் நினைவிற்கொள்ளாது, விட்டு விட்டு மறந்தும் நினைந்தும், ஐந்து அவத்தைகளிலும் மாறி மாறி வருவதை நாம் காட்சி யளவையாகப் பார்க்கின்ருேமாதலால், நீ நன்ருக ஆராய்ந்து பார்ப்பாயானுல் காட்டுகின்ற ஒளிக்கு வேருகக் கண்ணொளி யிருப்பதுபோல், அறிவிற்குவேருய் அது அதுவே தானென்றும் சொல்லும்படி சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் உயிர் ஒன்று வேறு உளது என்பதை யறிவாயாக என்று இவ்வாறு விஞ்ஞான ஆன்மவாதியை, "உணர்த்த உணர்தலின் உளது" என்று மறுத்தலும், சமூக ஆன்மவாதி யெழுந்து, "பிரமம் ஆன்மாவல்லை யென்பதுணர்ந்தோம். ஆயின், அனைத்துங்கூடிய சமுதாயமென்கின்ற உயிராதல் அமையும்" என்று கூறுதலும், "ஓ! சமூக ஆன்மவாதியே! மாயையின் காரியங்களால் கட்டப்பட்டு அசைகின்ற சூத்திரப் பொம்மை போலும் உடம்பினிடத்தே அவற்றிற்கு வேருகிய ஆன்மாவொன்று உண்டு என்பதை யறிவாயாக. ஏனெனில், நீ ஐந்து கந்தமென்று கொண்ட மாயா காரியங்கள் ஆன்மாவென்று சொல்லப்படுவதில்லை. அவற்றிற்கு வேறு வேறு பெயர் கூறுகின்ற

னர். ஆகையால் இவ் வுடம்பிற்கு வேறாக உயிர் உண்டு என்பதை யறிவிப்பார்,

"கலையாதி மண்ணந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போல-வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடிலது தநுவாந்
தானத்தின் வேறாகுந் தான்"

என்னும் வெண்பாவை அருளினர். இதன் பொருளாவது, "அவ்விதம் ஒன்று கூடிச் சமுதாயம் ஆதற்குரியவை எவை யென்று நாம் அறியப் புகுந்தால் கலை முதல் நிலம் ஈறாகிய தத்துவங்களாகவே யுள்ளன. அத் தத்துவங்க ளெல்லாம் மாயையின் காரியங்க ளாதலால், நிலையுடையனவாக வில்லாமல் சிலகாலங்கள் இருந்து பின்னர் அழிவனவாகவே உள்ளன. ஆனால் அவ்விதம் அத்தத்துவங்கள் ஒன்று கூடிய கூட்டங்கள் காணப்படுவதாகிய ஞானத்தின் தன்மையினை நன்றாக உணர்ந்து அக்கூட்டம் எதுவென ஆராயும் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குத் தூல சூக்கும பரங்களாகிய உடம்பேயாகும். ஆகையால் கண்ணனது விளக்குக்கு வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பிற்கு வேறாகும் என்பதாம்" என்று இவ்வாறு "மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா உளது" என்பதை யுணர்த்தியதாயிற்று.

இச்சூத்திரத்திற்குக் கூறிய முதல் ஐந்து அதிகரணங்களால், "சார்மாயை நீயல்லை" என்பதையும், ஆறாவது அதிகரணத்தால், "தற்பரமும் நீயல்லை" என்பதையும், ஏழாவது அதிகரணத்தால், "நீதனி யாவாய்" என்பதையும் முடித்துக் காட்டியதாயிற்று. இவ்விதம் மூன்று சூத்திரங்களாலும், பதி, பாச, பசு என்பவை அநுமான அளவைகளால் வலியுறுத்திக் காட்டப்பட்டன.

மூன்றாஞ் சூத்திரம் முடிந்தது
பிரமாணவியல் முற்றுப்பெற்றது.

இம் மூன்றாஞ் சூத்திரத்திற்குப் பொருளெழுதிய தெளிபொருள் விளக்க வாசிரியர், "உணர்த்த உணர்தலின்" என்றமையால், அஞ்ஞான ஆன்மவாதிகளை மறுத்தும் என்று விஞ்ஞான ஆன்மவாதிகளென்று சித்தாந்திகள் கூறுவதை அஞ்ஞான ஆன்மவாதிக ளென்று கூறுகின்றனர். அன்றியும் மற்றோரிடத்தில், இச்சூத்திரம் மிகு முக்கியமாகவுள்ள சூன்யாத்மவாத முதலியவற்றை மறுத்துக் கூறி, ஆத்மா அவஸ்தாத்திரய சாட்சியாய்ச் சச்சிதானந்த சங்கர வடிவமா யிருக்கின்றதென்று அதன் சொரூபத்தை நன்கு விளக்கியதென்க.

ஆத்மா அவஸ்தாத்திரய சாட்சியாய்ச் சச்சிதானந்த சங்கர வடிவமா யிருக்கின்ற தென்பதை உள்ளவாறுணர்ந்து, உணர்ந்த வாறிருப்பவர்க்கன்றி மற்றவர்க்கு ஜனன மரண நோய் நீங்காததென்பது,

"ஓர்த்துள்ள முள்ளதுணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

என்று திருக்குறள் கூறுவதாலும்,.... நன்கு விளங்குவதா மென்க என்று கூறித் தம் ஏகான்மவாதத்தை நாட்டுகின்றனர். இவ்விதம் நாட்டுகின்ற இப்பெரியார் தம் ஏகான்மவாத நூல்களினின்றும் மேற்கோள்கள் கூறுவதுடன், யார்க்கும் பொதுவனாகிய திருவள்ளுவன் மெய்யுணர்தலிற் கூறிய விமரிசத்திற்குரிய திருக்குறளாகிய,

"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

என்பதை மேற்கோளாகக் கூறியுள்ளனர். இவர் உரையைப் படிப்பதும், கேட்பதும் வாக்குக்கும் செவிக்கும் இனிமையையே தருவதாக இருப்பினும் ஏதேனுங் குணமுள்ளதோ என்று நோக்கின், மணற் சோற்றை ஆராய்வதையே ஒக்கும். எவ்விதமிருக்கினும், இந்நூலை எம் சித்தாந்திகள் ஒருவரும் வாங்கிப் படித்திரார். ஆதலால் ஒவ்வொரு சூத்திரத்திலுமுள்ள சிலவற்றை அறியும் பொருட்டு ஒவ்வொன்றை எழுதிவருகின்றேன்.



---

# திருக்குறளிற் காணப்பெறும் சமயவுண்மைகள்

[அ. முத்தையப் பிள்ளை பி. ஏ. பி. எல்.]

A. D. 100 அல்லது 150-க்குப் பிந்தியதல்லவென்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுரைக்கும் கடைச்சங்க நூல்களின் ஒரு பகுதியாகும் பதினெண் கீழ்க்கணக்கி லடங்கியவைகளில் திருக்குறள் ஒரு சிறந்த நூலாகும். இது யாவராலும் பொதுநூலெனப் பாராட்டப்பெற்று வருகிறது. சங்க நூல்களில் எதற்குமில்லாத பெரும்புகழ் இந்நூலுக்குண்டு. இதைப் போன்று பெருமைபெற்ற நூல்கள் உலகிற் சிலவே. இந்நூலின் பெருமை உலகெங்கும் பரவியிருக்கிற தென்பதற்கு உலகின் பல பாகங்களிலுமுள்ள பல சிறந்த மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட் டிருப்பதே போதிய சான்றாகும். இதிற் காணப்பெறும் சமயவுண்மைகள் தெரியவே இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் மக்களின் சமயக்கொள்கைகள் எவ்வாறிருந்தனவென்று தெரியலாகும்.

எல்லாப் பொருளு மிதன்பாலுள விதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையால்.

என்றனர் மதுரைத் தமிழ் நாயகனார். எல்லாப் பொருள்களு மென்பதற்கு உரையாசிரியர் முதல் வழி சார்பென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டு நூல் என்பவற்றிற் செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப் பொருளென இம்மூவகையாற் கொள்ளக்கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொருள்களுமாம். தொழிலும்பண்பும்ஒரோவழிப்பொருளெனற் கேற்புடைமையின் அவையும் இவற்று ளடங்குமாறறிக" என்று உரையளிக்கின்றனர். ஆராயின், பொருள் என்பது அறம் பொருளின்பமும் அவற்றின் நிலையின்மையும் அவற்றினீங்கிய வீடுபேறுமென்று துணியப்பெறும். தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் இப்பொருளையே இந்நூலில் முப்பால்களாக வகுத்துரைக்கின்றனர். சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகும் வீடு பற்றியும் இந்நூல் கூறிற்றென்பதை "வீடு தெளிந்தேம்" என்னும் கொடி ஞாழல்மாணி பூதனார் வாக்கு வலியுறுத்தும். "அருமறைகளைந்தும் சமய நூலாலும் நம் வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள்" என்பது ஆராய்ச்சிக்குரியது. என்றாலும் சமயநூற்களின் சாரமாகிய உண்மைப் பொருளை மெய்யுணர்வாற் கண்டு அதனை வள்ளுவர் இந்நூலில் வழங்கி யிருக்கிறாரென்று கூறுவதற்கு அது துணைபுரியுமென நினைக்கிறேன்.

நான் யார்? என் உண்மை நிலையென்ன? இவ்வுலகின் உண்மை நிலையென்ன? எனக்கும் இவ்வுலகிற்கும்

சம்பந்தமென்ன ? இவ்வுலகிற் காணப்பெறும் நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களென்ன ? இவைகளையுள்ளபடி யுணர்தலின் பயனென்ன ? என்பவை போன்ற வினக்களை யெழுப்பி அவைகளுக்குத் தக்கவிடைக ளளிக்குமுறையில் பொருள் நிச்சயஞ்செய்து முடிக்கும் தீர்ந்த முடிபுகள்தான் சமயக் கொள்கைகளெனப் பெயர் பெறும். இவைகளைப் பலர் பல வழிகளிலாராய்ந்து தெளிந்து பலவாறு விடைகளளித்துப் பொருள் நிச்சயஞ் செய்திருக்கின்றனர். இவைகளின் ஒற்றுமை வேறுபாடுகளுக் கிணங்கப்பல சமய குரவர்களும் சமயக் கணக்கர்களும் சமயங்களும் சமயக் கொள்கைகளும் நிலை பெறலாயின. “ அருமறை களைந்து சமய நூலாறு” என்று முன் கூறியதே சமயக் கொள்கைகளின் பிணக்குகளை ஒருவாறு விளக்கும். இவ்வாறு பல் வகைப்பட்ட சமயங்களின் தலைவர்கள் ஒவ்வொருவரும் தாந்தாங் கொண்ட கொள்கைகளே உண்மைக் கொள்கைகளென்று சாதிப்பர். இவர்களைக் கடவுளென்றும் கடவுளவதாரமென்றும் அபிமானிகள் கூறுவர்.

“ நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
..................................
விரத மேபர மாக வேதியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்த மதங்களே
அமை வதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பி
கலா பேதத்த கடுவிட மெய்தி [ன்
யதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்”

என்னும் மணிவாசகப் பெருந்தகையின் திருவாக்கு இது சம்பந்தமாய் ஊன்றி யுணரற்பாலது.

“எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொ
மெய்ப்பொருள் காண்ப தறிவு” [ருள்

என்றும்,

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு” [பொருள்

என்றும் நாயனார் கூறியவாற்றால் எப்பொருள் என்ன தன்மையுடையதாயிருப்பினும் யாவர் கூறினும் அப்பொருளினின்றும் மெய்யாகிய பொருளையும் மெய்யாகிய பயனையும் அறிந்து கொள்வதே அறிவாதலானும்,

“பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணுப் பிறப்பு”

என்றமையின் மெய்ப்பொருளல்லவற்றை விபரீத வுணர்வாலே மெய்ப்பொருளென்று கொள்ளின் அது துன்பந் தரும் பிறப்பை நல்குமாதலானும், சமயங்களின் பிணக்குகளை நீக்கி விபரீத வுணர்வகற்றி மெய்புணர்வினுல் மிக்கதோர் கொள்கையைக் கொள்ளலே மாண்புடைத்து. வள்ளுவனும் இவ்வாறு பல சமய நூல்களின் சிக்கறுத்து விபரீத வுணர்வகற்றி மெய்புணர் வுடையராய் மெய்ப்பொருள் கண்டு வீட்டியல் கூறினர் என்பது தோன்றவே,

—“ அருமறைக
ளைந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்”

என்று களத்தூர்க்கிழார் கூறினர் போலும்.

மெய்புணர்வு கைவரப் பெற்ற வள்ளுவனார் கூறும் சமய வுண்மைகளை இனி ஆராய்வாம்.

“ அகர முதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு”

என்பது முதற் குறள். இதில் வள்ளுவர் பொருளியல்புரைத்தலாகிய மங்கல வாழ்த்துக் கூறுகின்றார். காணப்



படும் உலகப் பொருளிலிருந்து காணப்படாத கடவுளுக்கு உண்மை கூறுகின்றார். உயிர்களின் வேறாய் கடவுளுண்மையும் அக்கடவுள் முழுமுதலாயிருக்குந் தன்மையும் அவன் ஒருவனே என்னும் இயல்பும் அவன் என்றுமுளனென்னுங் கருத்தும் காணக்கிடக்கின்றன. ஆதியென்ற அடைமொழியால் அவன் என்றுமுளனு யிருப்பதோடு அந்தஞ் செய்பவனுகவு மிருக்கவேண்டுமென்பது ஆராய்ச்சியிற் பெறப்படும். அகர நாதத் துணை கொண்டே மற்றைய வெழுத்துக்கள் உச்சரிக்கப்படுவது போல உலகம் அவனையன்றித் தொழிற் படாதென்பதும் தெரிகின்றும்.

தொல்காப்பிய மெழுவதற்கு முன்னுக்கப்பட்டதா யிருக்க வேண்டுமென்று கூறுவார் சிலரிருக்க, சில சொற் பிரயோகங்களையும் கருத்துக்களையும் காட்டி, திருக்குறள் கடைச்சங்ககாலத்திற்குப் பிந்தியதென்றும், பாயிரமாகக் கருதப்படும் முதல் நான்கு அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றியதில்லை யென்றும், சிறப்புப் பாயிரமாகக் கருதப்படும் திருவள்ளுவ மாலை மிகப் பிந்திய தென்றும் சிலர் கருதுகின்றனர். இந்நிலையில், பாயிரங்களிலிருந்து நாம் ஒரு முடிபுகட்டாமல் நூலின் மற்றப் பாகங்களிலிருந்து பெறப்படுவனவற்றைக் கொண்டு ஒரு முடிபுக்கு வந்தால் அது கடைச்சங்கத்தார் காலத்தில் தமிழ் மக்கள் கொண்டிருந்த சமயக் கொள்கைகளாகக் கருதப்படா விட்டாலும் அதற்குச் சற்றுப் பிந்திய காலத்திருந்த தமிழ் மக்களின் சமயக் கொள்கைகளாகவாவது ஆக்ஷேபணையின்றிக் கருதப்படலாம். ஆதலின் நூலின் மற்றப் பாகங்களிலிருக்கும் குறள்களையே ஆராய்வோம்.

ஊழ் என்னும் அதிகாரத்தில் ஆசிரியர்,

“ வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது”

என்றார். இதை நன்கு ஆராய்ந்தால் முற்கூறிய பொருள்களையே இதிலும் கருதியுணரும்படி வைத்திருக்கின்றனரெனத் தெரிகிறது. வகுத்தான் ஒருவனென்பதும் அவன் வகுக்கும் ஆற்றலுஞ் சுதந்திரமு முடையவனென்பதும், அவன் துய்க்கும் உயிர்களின் வேறானவனென்பதும், சுதந்திர மில்லாத வுயிர்கள் அவன் வகுத்த வகையினன்றித் துய்க்கு மாறில்லை யென்பதும், வகுத்தலால் அவனே தலைவனுக வேண்டுமென்பதும், தலைவனுகவேண்டுதலின் என்று மிருப்பவனுகவும் அந்தஞ் செய்பவனுகவு மிருக்கவேண்டுமென்பதும் பெறப்படவில்லையா ?

இம்முதற் பொருளைச் சமயச் சார்பான பெயர்களாற் குறியாது, நாயனார், இறைவன், பற்றற்றான், அறம், சிறப்பு, செம்பொருள் என்று பொதுப் படக் காரணக் குறியாற் குறிக்கின்ற தன்மை உய்த்துணரற் பாலது. சமயக் கணக்கர்களின் சொல்வழிப் படாது பொதுவில் நின்று எவரும் ஐயந்திரிபின்றி உய்த்துணர்ந்துய்யுமாறு வீட்டியலை உள்ளபடி கூற வேண்டுமென்பது நாயனார் நோக்கம் போலும்.

“விரைந்து தொழில்கேட்குஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்”

என்றானன்றே ! இனி,

“ சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்ற
சார்தரா சார்தரு நோய்” [ழித்துச்

என்ற குறளால் ... சார்



187146.

புக்கும் கெடுக்கவேண்டிய சார்புக்கும் வேற்றுமை காட்டி முதற்பொருளாகிய செம்பொருள்உயிர்களோடுபிரிப்பின்றி நிற்கின்றது என்ற செம்பொருளின் தடத்த விலக்கணங் காட்டியதன்றி அவன் பிரிப்பின்றி நிற்குந் தன்மை யுணர்ந்து சுதந்திர மின்மையை யுன்னிப் பற்றற்று யோக வொழுக்கங் கொள்ள வினைப்பயனாகிய துன்பங்கள் சாரமாட்டா வென்பதையும் உணர்த்தியவாறாயிற்று. இவ்வருமைக் குறளைத் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் உணர்ந்து தெளிந்து அதனுட் பொருளைத் தெரிவிக்கு முறையில் எடுத்தாண்டிருக்குந் தன்மை மிகவும் பாராட்டற் குரித்து.

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகினென் [றமையாற்
சார்புணர்வு தானே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியு மாங்கேதப்
படவருவ தில்லை வினைப்பற்று"

—(திருக்களிற்றுப்படியார்)

இறைவனிலக்கண மிவ்வாறாக, உயிர் தளை இவைகளினுண்மையையும் இலக்கணத்தையும் எவ்வாறு நாயனார் கருதுகின்றனரென்று பார்ப்போம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றும்,

"யானென தென்னும் செருக்கறுப்பான்
குயர்ந்த வுலகம் புகும்" [வானோர்க்

என்றும் கூறியவாற்றான் உயிர்கள் ஒன்றைப்பற்றி நிற்குந் தன்மையுடையனவென்றும் இயல்பில் நீக்கவேண்டிய பொருளை (பாசத்தை)ப் பற்றியிருக்கின்றன வென்றும் அப்பற்று அநாதியே பெறப்பட்டு வருகிறதென்றும், பிரிப்பின்றி யுறைந்தும் பற்றாகிய பாசத்தளையி லகப்படாத இறைவனைப் பற்றப் பாசநீக்க முண்டாகுமெனவும் உயிர்களுக்கு யான் எனது என்னுஞ் செருக்கு (மயக்கம்) அநாதியாயுள்ள தென்றும் இம்மயக்கம் கெட்ட ; வழி வீடு பேற்றுக்கு வழியுண்டாமென்றும் தெரியக்கிடக்கின்றன. இக்குறள்களுடன் "யாதனின் யாதனி னீங்கியான்" "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்ற தொடக்கங்களையுடைய குறள்களையும் இணைத்து நோக்கின், உயிர் தளை இவைகளின் உண்மையும் அவைகளென்று முளவாந்தன்மையும் பெறப்படுவதோடு உயிரிலக்கணங்களாகிய சார்ந்து நிற்குந் தன்மையும் அநாதியே தளையோடு கூடியிருக்குந் தன்மையும் உணரப்படுகின்றன.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

"புக்கிலமைந் தின்றுகொல் லோவுடம் பினுட்
டுச்சிலிருந்த வுயிர்க்கு"

என்னும் குறள்கள் உயிர்களுக்குப் பிறப்பிறப்பு எண்ணில வென்பதைத் தெளிவா யுணர்த்துகின்றன. இப்பிறப்பிறப்புகள் இருவினைகளின் பயனாய் வருகின்றன வென்பது "இலர்பலாகிய காரணம்" "அறத்தாறி துவென வேண்டா" "தவமுந் தவமுடையார்க்காகும்" என்ற தொடக்கங்களையுடைய குறள்களால்நன்கு புலப்படும். இப் பிறப்பிறப்புக்களை உயிர்களுக்கு இறைவனே அருள்கின்றா னென்பதற்கு "வகுத்தான் வகுத்த வகையல்லால்" என்றது தக்க சான்று. இப்பிறப்பு ஒருநோய் என்று வள்ளுவர் வழங்குவதைப் பல விடங்களிற் காணலாம். இந்நோய் நீங்குதல் அநாதியாயுள்ள மலங்களாகிய அவிச்சை அகங்



காரம் அவா ஆகிய இவைகள் நீங்கிய வழியே ஆகுமென்பார்,

"காமம் வெகுளி மயக்கமிவை மூன்ற
னாமங் கெடக்கெடு நோய்"

என்றார்.

இனி இவ்வுடம் பெடுத்தலாற் பெறும் பெரும்பயன் வீடடைதற் கேதுவாகிய பிறப்பறுத்தலே யென்பார்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்
வேண்டாமை வேண்ட வரும்" [றது

என்றார்.

குறளாசிரியர் நூலிற்கொண்ட குறிக்கோள் இதுதானென்று விளக்குவதற்கு நூலிற் பல சான்றுகளுள. திருக்குறள் என்னும் நூலுக்கு இக்குறளே அச்சாணி யெனலாம்.

பிறப் பிறப்புக்களை நோயென்று குறித்தவர் அந்நோய் நீங்க என்ன வுபாயங்கள் கூறுகின்றா ரென்பதை யாராய்வோம்.

"நோய்நாடி நோய்முதல் நாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

வள்ளுவர் முறை. ஆகவே, நோயின் நிலைமையையும் நோய்க்கு முதற் காரணத்தையும் நன்கு ஆராய்ந்து நோய் தீர்க்கும் மருந்துகளை வாய்ப்பச் செய்கின்றார்.

"யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்"

என்று படிப்படியாய்ப் பொருள்களினின்றும் பற்றை நீக்கும்படி செய்து பின்னால் அப்பற்றுக்குக் காரணமாகிய அநாதியாயுள்ள மயக்கத்தை நீக்க வேண்டுமென்பார்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான்
குயர்ந்த வுலகம் புகும்" [வானோர்க்

என்றார். இவ்விதம் விடவேண்டிய பொருள்களைக் கூறி அவைகளை விலக்கிப் பத்திய மிருக்கும்படி செய்து மேற் செய்யவேண்டியவைகளாகக் கருதப்படும் உட்கொள்ளும் மருந்துகளாக,

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்ற
சார்தரா சார்தரு நோய்" [ழித்துச்

"காமம் வெகுளி மயக்கமிவை மூன்ற
னாமங்கெடக்கெடு நோய்"

என்றும் சொல்லி, இறைவன் பிரிப்பின்றி நிற்குந் தன்மையை நினைந்து, உலகப் பொருள்களின் பற்றை நீக்கி, அகங்காரம் அவிச்சை முதலிய குணங்களையும் விலக்கி, யோக வொழுக்கத்திலொழுக வேண்டுமென்றும் உணர்த்துகின்றார். அவ்வொழுகலாறு கேட்டல் சிந்தித்தல் தெளிந்து நிட்டைகூடலென்பதை "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்" "ஓர்த்துள்ளமுள்ள துணரின்" "பிறப்பிறப் பென்னும் பேதமை நீங்க" என்னும் தொடக்கக் குறள்களால் விளக்கிக் குறித்த யோக நெறி முதிர்ச்சியின் பயனிது வென்பார்,

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்றும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றும் கூறுகின்றனர். இவைகளில் முதற்குறள் கடவுள் வாழ்த்திலுள்ளது என்றாலும், ஆக்ஷேபணை யில்லாத அடுத்த குறளுடன் பொருளொற்றுமைப் பட்டிருப்பதை நோக்கி அதனையும் எடுத்துக்கொள்ளலாமென நினைக்கிறேன். அநாதியாய் உயிர்களைப் பற்றி நிற்கும் பாசம் நீங்கற்குச் செய்யும் உபாயத்தை இரு குறள்களும் உணர்த்துகின்றன. அவ்வுபாயமாவது

இறைவன் எவ்வகையில் உயிர்களோடு பிரிப்பின்றிக் கலந்து "அவையே தானே யாய்" நிற்கின்றானோ "அந் நெறி ஏகனாகி இறைபணி நிற்க"ப் பாச நீக்க முண்டாகு மென்பதே.

இவ்விதம் பாச நீக்கம் பெற்ற பொழுதும் முத்தியின்பம் அனுபவித் தலாகாமையால் அதற்கு வேண்டப் பெறும் பேறாகிய மெய்யுணர்வின் சிறப்பை,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வற்கு"

என்று விளக்கினார். பாச நீக்கம்பெற்ற தோடு மெய்யுணர்வும் பெற்றபொழு தே முத்திப்பே றடைதலாகு மென்பார்,

"இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

என்று கூறினார். இவ்வாறு பாசவிடுதி பெற்று முத்திப்பே றடைந்தார் தன்மையை,

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து"

என்னும் திருக்குறளால் தெளிவுபடக் கூறுகின்றனர். இந்நிலையை யன்றோ பாசவிடுதி பெற்றுச் சிவப்பேறு பெற்ற சீவன் முத்தர்களின் நிலை யென்று சைவர்கள் கூறுவது!

இதுகாறும் ஆராய்ந்ததில் புலவர் பெருமான் வள்ளுவர் தாமருளிய ஒப் புயர்வற்ற நூலிற் புதை பொருளாய் வைத்திருக்கும் சமய வுண்மைகளை ஒருவாறு கண்டோம். அவை, கடவுள் ஒருவனென்பதும், அவன் முதல் வனென்பதும், அவன் என்றுமுள னென்பதும், அவன் உயிர்களின் வேறானவனென்பதும், அவன் எப்பொருட் கும் இறுதிபயந்து எஞ்சி நிற்பவ னென்பதும், உயிரும் தளையும் அநாதி யுவது பசுவும் பாசமும் என்றும் உள வென்பதும், உயிர்களை அநாதியே பாசம்பற்றி நிற்கின்ற தென்பதும், உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மையும் பாசத்தோ டுளவாந் தன்மையும் பெற்றனவென்பதும், உயிர் கள் வினைப்பயன்களால் இறத்தல் பிறத்தல் என்னும் நோய்வாய்ப்படு கின்றனவென்பதும், வினைப் பயன் களை உயிர்களுக்கு அம்முதல்வனே வகுத்து வைக்கிறானென்பதும், உயிர்க ளுடன் பிரிப்பின்றிப் பற்றிக்கொண் டே அம்முதல்வ னிருக்கிறா னென்ப தும், முதல்வ ன் அநாதியே பற்றற்றானா யிருக்கிறானென்பதும், உயிர்கள் நோய் நீங்கப்பெறுவதற்குக் கேட்டல் சிந் தித்தல் தெளிந்து நிட்டைகூடல் முத லிய முறையில் யோகப்பயிற்சி செய்ய வேண்டுமென்பதும், யோகநெறியொழு கின் அவ்வொழுக்கம் முதிர்ச்சி பெற்று முதல்வன் உயிர்களோடு கலந்திருக் கும் முறையில் அவனுடன் ஏகனாகி நிற்கப்பெறின் பாசம் நீங்குமென்ப தும், பாசம் நீங்கியும் முத்திப்பேற டைவதற்கு மெய்யுணர்வு பெற்று எந் நேரமும் முதல்வன் "அவையே தானேயாய்" உயிர்களுடன் கலந் திருக்கும் தன்மையை யுள்ளபடி யுணர்ந்து எப்பொழுதும் அனுபவிக் கப் பெற வேண்டுமென்பதும், அவ் விதம் பெற்ற சீவன் முக்தன் நிலையை யுணரின் அவற்கு வையத்தில் வானம் நணிய துடைத்து என்பது மாம்.

இக்கொள்கைகள் நாத்திகர்களுக்கும், உயிர்கள், வினைப்பயனாக எண்ணிறந்த பிறப் பிறப்புக்களைப் பெறுகின்றன வென்பதை யொப்புக் கொள்ளாத சமயிகட்கும், காட்சி வாதிகளாகிய உலோகாயதர்கட்கும், தானன்றியய



தில்லான் என்னும் ஏகான்மவாதிகட் கும், சூனியவாதி விஞ்ஞானவாதி சமு தாயவாதிகளாகிய கணபங்க வாதிக ளென்னும் பௌத்தர்கட்கும், அநே காந்த வாதிகளாகிய சமணர்களென் னும் ஆருகதர்கட்கும், காத்தற் கடவு ளே முதற்கடவுளென்னும் பாஞ்சாரத் திரிகட்கும் உடன்பாடாகாமை யறிக.

பின் என்னையோவெனின்,

"ஓரும் வேதாந்த மென்றுச் சியிற்பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்த
சாரங் கொண்ட சைவ சித்தாந்த"க்

கொள்கைகளுக்குப் பெரிதும் பொருத்த முடையனவாய், யாவரும் சிந் தித்துத் தெளிந்து ஒப்புக் கொள்ளக் கூடியதா யுயர்ந்த முறையிலமையப் பெற்றிருக்கின்றன வென்றே ஆராய்ச்சி முடிப்பாய்க் கொள்ளக்கிடக்கின் றன. பொய்யில் புலவன் கூறிப் போந்த பொருள், உண்மை நெறி யென்றும் மெய்ந் நெறி யென்றும் போற்றப் பெறும் சைவ நெறிக்கு அரண் செய்து நிற்றல் விருப்பு வெறுப் பின்றி ஐயந்திரிபற வாராய்ந்துணரும் எவரும் அறியத்தக்கதே.

---

# ஓவியக் காட்சி

[R. பச்சைய பிள்ளை]

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

பிறவியாகிய பெருங் கடலை நீந்து வதற்கு இறைவன் திருவடியை இடை விடாது நினைத்தல் வேண்டுமென்று மேற்காட்டிய தமிழ்மறைஅறிவுறுத்து கின்றது. அங்ஙனம் பிறவியாகிய பெரிய கடலில் மற்றோர் பற்றின்றிக் கிடப்பவனுக்குக்கரை காட்ட நிற்பவர் எந்நிலையினர் எத்தகையினர் என் பதை அவன் உணர்ந்து கொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாத தாகுமன்றோ!

கடவுள் அகண்டாகார நிலையினைப் பலவாறு கூறப்பட் டிருக்கின்றது.

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"

என உமாபதி சிவனாரும்,

"ஆறறி வாரெங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நிகளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே"

எனத் திருமூலனாரும்,

"சொற்பதங் கடந்த தொல்லோன்"
"சித்தமுஞ் செல்லாச் சேட்சியன்"

என மாணிக்க வாசகனாரும்,

"அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்" எனத் தாயுமானாரும் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறு கடவுளின் அகண்டாகாரத்தை மக் கட்கு அறிவுறுத்தினால் அந்நிலையினை என் போன்றோர் எவ்வாறு இடை விடாது உள்ளிச்சேர்வது? மனம் உள் ளப்படாத் திருவுருவினை உள்ளும் முறையில் வைத்துக் காட்டினாலன்றி நம் பேரறிஞர்கள் நமக்குப் பயன்படும் முறையில் உழைத்ததாகக் கூறமுடி யுமா? அல்லது நாம் தான் அவ்வுள் ளப்படாத் திருவினை நினைத்தற்கும், நினைத்து பிறவியைத் தூய்மை செய் தற்கும் இயலுமா? ஆனதனால் தான் நம் தமிழ்ச் சான்றோர்கள் புலனறி வில் கட்டுப்பட்டுக் கிடப்போர் மனத் தியல்பு அறிந்து அதற்கேற்ப அவர் கள் மனம் பற்றுவகையான் வழி

காட்டி யிருக்கிறார்கள். மனம் ஒருபொழுதேனும் அமைதியாக நில்லாது புறப்பொருள்களிடத்துஓடி ஓடி அவற்றின்மேல் பற்றுவைத்து ஒழுகுகிறது. அத்தன்மைத்தாகிய ஓடும் மனம்பற்றி நிற்பதற்கு ஒன்றுவேண்டும். புறத்தே காணப்படும் இன்பந் தரும் ஓவியத்தில் மக்கள் நினைவு வருத்தமின்றி எவ்வளவு எளிதாக ஒன்றுபட்டு நின்றுவிடுகின்றது! பெரிய உருவத்தைச் சிறியதாகக் காட்டுவதும் சேய்மையிலுள்ளதை அண்மையிலுள்ளதாகக் காட்டுவதும் ஓவியக்காரர் திறம். கையினால் புனைந்து இயற்றப்படும் இத்தகைய ஓவியம், கண்டவளவானே நினைவை ஒரு வழி நிறுத்தி இன்பத்தினைத் தந்து, பின்னர் அவ்வின்பத்தை மறைக்கின்றது. ஆனால் நல்லிசைப் புலவர்களால் ஆராய்ந்து வரையப்பட்ட எழுத்தோவியமோ அத்திறத்ததன்று. அவ்வோவியத்தைப் பயிலும்பொழுதும் அதனை நினைக்கும் பொழுதும் இன்பம் பயக்கின்றதல்லமோ? அதனால் விளையும் பயன் இவ்வளவென்று சொல்ல இயலாது. ஈண்டு ஓர் எழுத்தோவியம் காட்டுகிறேன்.

“கானகத்தே சகுந்தலை துஷியந்த அரசன்மேற் கொண்ட காதல் வெப்பம் பொருளாய்ப் பிரியம்வதை, அனசூயை என்னுந் தன் தோழிமாரிருவருந் தன்னிருமருங்கு மிருப்ப, மலர்ப் பாயலிற் படுத்த வண்ணமே தன் காதலை அறிவித்துத் தாமரை யிலையில் ஒரு செய்யுள் எழுதுதற்குக் கையில் எழுதுகோல் ஏந்தியபடியே ஒரு புருவம் மேல் நெறியக் கவியை நினைத்தலும், அவள் பக்கலிற் பசுத்து அடர்ந்திருக்கும் புல்மேற் பூக்கள் இறைந்து கிடத்தலும், பின்னே ஒரு மான் இவர்களைத் திரும்பிப் பார்த்த வண்ணமாய் நிற்றலும், பருத்துயர்ந்த மரங்கள் மிக நெருங்கித் தண்ணிழல் பயந்து நிற்றலும், வலப்பக்கத்திருக்குந் தோழி பக்கத்தே தண்ணீர்க்குடம் ஒன்று நிற்கப் பிறிதொன்று சாய்ந்து கிடத்தலும், அத்தோழிமார் எடுத்து வந்த பூங்கூடைகளில் உருகெழுமரு மலர் நிரம்பி யிருத்தலும் பிறவும் இயற்கை மாறு படாமல் எவ்வளவு உண்மையாய் எழுதப்பட்டிருக்கின்றன! இவ்வாறுண்மை வழுவாதெழுதப்பட்ட அவ்வோவியத்தை நோக்குந்தோறும் நம்மறிவு அதன் வயப்பட்டு நின்று இன்பம் பயத்தல் கண்டாமன்றே?” என்பது. (மறைமலையடிகள்)

மேற் காட்டிய எழுத்தோவியம் அதில் கண்ட நிகழ்ச்சிகளை நம் கண்ணெதிரே காண்பது போலக் காட்டி எவ்வளவு மகிழ்ச்சியினைத் தரா நிற்கின்றது! அதுபோல இறைவனது உள்ளப்படாத் திருவுருவைப் பாட்டோவியமாக எழுதிக் காட்டிய பெரியோர் பலர். அவற்றில் இரண்டொன்று ஈண்டுத் தருகிறேன்.

“தோலுந் துகிலுங் குழையுஞ்
சுரு டோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்
சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு
முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்
தூதாய் கோத்தும்பி”

“தோடுடைய செவி யன்விடை
யேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி
பூசியென் னுள்ளங்கவர் கள்வன்’

“குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே”



“அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்” “போறி யாத பெருஞ் சுடர்” “சித்தமுஞ் செல்லாச் சேட்சியன்” எனச் சொல்லிய பொழுதும், நினைத்த பொழுதும் என் மனதில் என்ன படிந்தது? எதைக் கண்டேன்? சூந்யஉணர்வன்றி வேறெதனையும் கண்டேனில்லை. ஆனால், “தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்” “தோடுடைய செவியன்” “பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறு” என்னும் எழிலமைந்த பாட்டோவியத்தைச் சொல்லும் பொழுதெல்லாம், நினைக்கும் பொழுதெல்லாம் உள்ளப்படாத இறைவன் திருவுருவம் அருள் வடிவில் என் உள்ளத்தில் படிகிறது. இவ்வருள் வடிவத்தையே உலகிற்கு நம் முன்னோர்கள் காட்டிச் சென்றார்கள். அவ்வறிவுரையைப் பின்பற்றாது வாழ்பவர் எங்ஙனம் உய்வர்!

ஆண்டவனது அகண்டாகார நிலையினை உணர்ந்த அருளாளர்கள் “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்னும் சிறந்த நோக்கத்தால் மக்கள் உள்ளத்தில் புகத்தக்க முறையில் அருள்வடிவைப் பாட்டோவியமாக எழுதி யிருக்கிறார்கள். அது எவ்வளவு நுட்பமாக, எவ்வளவு திறமையாக, எவ்வளவு மனக்கவர்ச்சியுண்டாக வரையப்பட்டிருக்கிறது. நம்பெரியோர் எழுதிக் காட்டிய அருள் வடிவம், அழகு வடிவம், நினைக்க நினைக்க மக்கள் நெஞ்சை நீராய் உருகச் செய்கின்றது. ஆகையால், எடுத்த பிறவியைத் தூய்மை செய்ய வேண்டுமென்னும் கருத்துடையோர்க்கு மேற் காட்டிய ஓவியக் காட்சி எத்துணை உதவி புரியுமென்பதை நன்குணர்ந்து அதனைப் பயன் படுத்தி எல்லாரும் இனிது வாழுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

---

# திருத்தொண்டத் தொகை யாராய்ச்சி

[வி. ச. அருளானந்தம்]

உலகப் பொருள்களை ஆராய்ந்துழி அறிவுடைப் பொருள் களென்றும், அறிவிலாப் பொருள்களென்றும் இருவகைப் பாகுபாடுடையனவாகக் காணப்பெறும். அவற்றுள் இருவினைப் பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்வதற்குரிய நால்வகைத் தோற்றத்தானாகிய எழுவகைப் பிறப்பினிற் சார்ந்து நிற்கும் அறிவுடைப் பொருள்களையே உயிர் ஆன்மா பசு எனக் கூறு நிற்பர். இவ்வுயிர்கள் சார்ந்து நிற்கும் பிறவியும், அதனால் நுகரும் பயனும், அப்பயன்களை நுகரும் வகையிலேறும் மேல்வினைகளும், அவ்வழி ஏனைய பிறவிகளும் உண்டாகு மென்பது நுணுகி யாராய்ந் துணர்வார்க்கே யினிது புலனாகும். இவ்வகையில் பிறந்திறந்துழல்வதனையே பெரும் பிணியென மேலோர் கூறுவர். இத்தகைய பெரும் பிணியைத் தவிர்த்தவர்களே என்றுங் குறையாது நீங்காது மாறாது நிற்கும் பேரின்பப் பெருவாழ்வினை யடைந்தவராவர். இப்பிறவிப் பிணியைத் தவிர்க்கும் முறையைக் கடைப்

பிடித் தொழுகுவோர்களே உண்மையுணர்ந்த உயர்ந்தோராவர். இவ்வுயர்ந்தோர்களையே அன்பர் அடியார் திருத்தொண்டர் என இயம்பா நிற்பர். இத்தொண்டர்கள் நிலையாத போகபோக்கியங்களை விரும்பாது, பிறவிக்கு ஏதுவான அவாவினை வெறுத்து, நேரிடும் இன்பதுன்பங்களில் விருப்பு வெறுப்பற்று, இவைகளையே தனக்கணிகலனாகக் கொண்ட இறைவனது திருவடியினையே விரும்பி நினைந்து, அவனேற்கும் பணிகளைப் புரிந்து, இறுதியில் பிறப்பிறப்பற்று பேரின்பவடி வாய்த்திகழ்ந்து யாண்டுந் துன்பத்தினையடையாது திகழ்பவராவர்.

திருத்தொண்டத் தொகையின் கண் அரன்பணி அடியார் பணிகளே யாண்டுங் காணப் பெறுவது. இதன்கண் அறுபத்துமூன்று தனியடியாரும், ஒன்பது வகைத்தாய தொகை யடியாரும், அவர்களது அரனடியார் பணிகளுமே விதந்து ஓதுவதாய் விளங்கும். பொதுவாக நோக்குங் கால் அறுபத்துமூன்று அடியார்களது பணிகளும் தொகையடியார்களாகிய ஒன்பதின்மரது பணியுளடங்குவதாகக் காணப்பெறும். ஆகவே தொண்டர்களது பணிகள் யாவும் ஒன்பதின்மரதுபணிகளாகவேயிருக்குமென்பதூஉம் பெற்றாம். ஆகையால் தொகையடியார்களது பணியின் வகையினை யாராய்ந்துணர்ந்துழி பிற ஏனைய வடியார்களது பணிகளையு முணர்ந்தவர்களாவோ மென்பதும் ஒக்கும்.

திருநாவலூரர் திருவாரூரில் அடியார்கட் கடியனாகும் நாளென்றோ வென மனங்கசிந்து இறைவனை நினைந்து வணங்கித் திருக்கோயிலுக்குள் சென்றபோது இறைவன் பெருமையால் தம்மை ஒப்பார், பேணலால் எம்மைப் பெற்றார், ஒருமையா லுலகை வெல்வார், ஊனமே ஒன்றுமில்லார், அருமையாம் நிலையினின்றார், அன்பினால் இன்பம் ஆர்வார், இருமையுங் கடந்து நின்றார், இவர்களை நீயடைந்து, நீதியாலவர்கள் தம்மைப் பணிந்து, கோதிலா வாய்மையாலே நிறைசொன் மாலைப்பாடெனக் கூற; பின்னுமொரு முறை வணங்கி அடியேன் பண்ணுபா மாலை பாடுதற்கு இன்ன அடியார் இத்தகைய பண்புடையாரென வறியேன், அப்பரிசினையு மளித்தருள்க வென வேண்டினார். அம்மை யப்பனாக விளங்கு மிறைவன் உயிர்ப்பொருள்கள் துன்பங் களைந்து இன்புற நால்வகைப் பொருளை யுணர்த்தி யடையும் முறைமையை விளக்குந் திருமறையினை யளித்த திருவாக்கால், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என எடுத்திசைப்ப, இதனையே முற்கொண்டு திருத்தொண்டத் தொகைப் பதிகம் அருள் செய்தார். இத்திருத்தொண்டத் தொகையின்கண் முறையே,

"தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பாமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடி[யேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிசார்ந்த வடியார்க்கு மடியேன்"

என்று ஒன்பதின்மரைத் தொகுத்துக் கூறினார்.

இவ்வொன்பது தொகை யடியார்களைக் கூறியபோது, தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியே னென்பதில் இடமுஞ் சாதியுங் குறிப்பிட்டும்



திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன் என்பதில் இடமட்டுங் குறிப்பிட்டும், ஏனைய எழுவர் தம் இடம் சாதி முதலியவற்றைக் குறியாது, அவர் தம் பணியினைப் பகுத்தோதா நின்றனர். இதனை ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எல்லாம் வல்ல இறைவன் வேறாயும் உடனாயும் எல்லாமாயும் விளங்கியும்; உயிர்களுக் கருள்செய்யவேண்டி ஆங்காங்கு தனது வல்லமையை வெளிப்படுத்தியதன் வழி இன்ப மூட்டா நிற்பன். திருவாரூரில் திருநாவலூருக்குத் திருத்தொண்டத் தொகையினை யெடுத்தோதும்போது தில்லையையும் அவ்விடத் துள்ள அந்தணர்களையும் முதற்கணெடுத் தோதியது மிகவுங் கருதியுணரக்கூடிய ஒருண்மைப்பொருளாகும்.

தோற்ற முதல் ஒடுக்க மீறாகவுள்ள தொழில்களுள் ஒடுக்கமாகிய அழித்தலே தலை சிறந்ததென்பதும், இவ்வொடுக்க நிலையில் எல்லாப் பொருளையு மொடுக்கி, தன்னைப் பிறிதொன்று மொடுக்காது, தான்மட்டும் நிலைத்து நிற்பது எதுவோ, அதுவே முழுமுதற் கடவுளென்றும், அஃது அருவாயும் உருவாயும் அருவுருவாயு மிருக்குமென்றும், உருவ நிலையில் மட்டு முணருந் தன்மைத்தான உயிர்கள் கடவுளின் உருவ நிலையையே பெரிதுங் கருதிப் பேணுவார்களென்றும், உயிர்களின் வழிபாட்டினை யேற்று அருள் புரிய வெழுந்த பல்வேறு உருவத் திருமேனிகளுள் கூத்தப் பெருமான் திருவுருவமே தலை சிறந்ததென்றும், அப்பெருமான் சிறப்புற வீற்றிருக்குமிடமே கோயிலென்றும், அக்கோயில் காணும் வெளியே சிற்றம்பலம் என்றும் வழங்கா நிற்பர்.

அண்டபிண்ட ஒற்றுமைகளை யாவரும் நன்குணருமாறு ஐம்பெரும்பூதங்கட்கும் அண்டத்தில் ஐந்து தலங்களில் அவ்வப் பூதக் கோயில்கள் விளங்குவதைக் காண்கின்றோம். எல்லாப் பூதங்கட்கும் ஒடுங்குதற்கு ஆகாயம் இடமென்பது வெளிப்படை. ஆகாயக் கோயிலொன்றையே கோயில் எனுந் தனிச் சொல்லால் இன்றும் சொல்லா நிற்பர். இக்கோயிலின்கண் உருவத் திருமேனி கொண்டு அருள் புரியா நின்ற கூத்தப்பெருமானே முழுமுதற் கடவுளின் உருவத் திருமேனிகளுள் தலை சிறந்ததாகும். இதனை விளக்கவே அவர், தாமே படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளுந்தொழில்களை நடாத்தி வருகின்றோம் எனக் காட்டுஞ் சின்னங்களையுடையவராய் விளங்குகிறார். மேலும் மும்மலபந்தப் பட்டுழலும் உயிர்களின் தோற்றங்களும் பல்வகைத்தாய நன்மை தீமை புரிபவைகளாய் விளங்குவதால் எவ்வகைத் தோற்றங்கட்கும் பகைமை பாராட்டாது நடுவணின்று அதனதன் தீச்செயலை யழித்தாட் கொள்ளுகின்றோமென்பதுதோன்ற, முயலகனை இராக்கதனைக் காலின் கீழழுத்தியும், புலியின் தோலையாடையாகவும், யானையின் தோலைப் போர்வையாகவும், அரவினை அணியாகவும் பூண்டும், மானைக் கையிலேந்தியும் விளங்குகிறார். மேலும் ஒழுக்கநெறி பூண்டு நன்மையினைச் செய்யும் மக்கள் இடருறுங் காலத்தில் தாமே முன்னின்று இடரைக் களைந்து, பகையை யழித்து, அடைக்கலங் காட்டி, ஆதரிக்கின்றோம் வாருங்கள், எம்மைப்பாருங்கள், உண்மையையுணருங்க"ளென்று அறைகூவி யழைக்கும் ஒலியை யெழுப்ப,

உடுக்கையை ஒரு கையிலும், அழித்தலைச் செய்யுஞ் செந்தீயை மற்றொரு கையிலும் வைத்து, எத்தகையோராயினுஞ் சரண்புகுவார்க்கே யடைக்கலமளிக்க வொரு கையை உயர்த்திக் காட்டியும், வேண்டுனர்க்கு வேண்டியாங்களிப்பதாக மற்றொரு கையைத் தாழ்த்திக் காட்டியும், வினையின் வழி எப்பயனையும் புசிக்குமாறு செய்ய ஒரு காலை யழுத்தியும், போகங் கழிந்து மலபரிபாகம் வந்து சத்திநிபாதம் நேர்ந்துழித் திருவருளின்பமடைய வேண்டுமென்பதைக் காட்ட ஒரு காலைத் தூக்கியும் விளங்கா நின்ற கூத்தப் பெருமானொருவனே யருள வல்லாராவர். இவனையே போற்றி வாழ்த்தி வணங்கிப் பெருவாழ்வை யடையுங்களென்பது தோன்ற, தில்லையென்னு மிடத்தையும் இறைவன் திருத்தொண்டத் தொகைக்கு ஆதியாகக் குறிப்பிட்டார். தொண்டை விரும்பிச் செய்யும் மக்களுக்குத் தொண்டின் இலக்கணத்தை விளக்க வேண்டுவது இன்றியமையாததாலும் தொண்டின் சீரிய தன்மையை யடைந்தோர் அறவோராகிச் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராதலாலும், தொண்டின் தொகையை விளக்க வந்த சுந்தரமூர்த்தி யடிகளுக்கு இறைவன் தில்லையாகிய விடத்தையும், அவ்விடத்தே விளங்காநின்ற அந்தணரையும் முதன் முதலாக வோத இறைவன் எடுத்திசைத்தனன் போலும்.

பகுத்தறித லென்னும் பண்பினைப் பெற்ற மக்கள் அறிவு விளக்கமுற்று நன்மை தீமையினை யுணர்ந்து தீச்செயலை யொழித்து நன்மையினைக் கருணைத் திறங்காட்டி யொழுகுவதனாலேயே அந்தணத் தன்மையைப் பெறுவர். கல்விச் செல்வத்தினை நிறையப் பெற்றவர்களே முற்றறி விளக்க முறுவர். இவ்வகையில் கல்வி நிறையப்பெற்று அறிவு விளக்கமுற்றவர்களே புலவரெனப் பெறுவர். இப்புலவர்களுள்ளும் சிலர் சீரிய வொழுக்கத்திற் றலைசிறவாதும், போலி வொழுக்க நெறியில் நிற்போருமுளர். இவர்களது அறிவு இச்சை செயல் முதலியன கருணைத் திறங் காட்டாது மறம் வளர்ப்பவைகளாகக் காணுறும். அது சமயம் அந்தணத் தன்மையைப் பெறாது இறைவனது இன்ப நீழலில் நில்லாதொழிவர். இதனைத் தடுக்கவே உண்மைப் பொருளை விளக்கும் உண்மை நூற்பொருளைக் கற்று புலமை யெய்தியும், கற்றவைக்கேற்ப அறனடியார் பணியாற்றும் மெய்த் தொண்டராய் விளங்கவேண்டுமென்பதூஉந்தோன்ற பொய்யடிமை யில்லாத புலவர்களைத் தொகுத்துக் கூறிப்போந்தார்.

இத்தகைய பொய்யடிமை யில்லாத புலவனாய் எவன் விளங்குகின்றானோ அவனே, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளிடத்தும், அவனைப் போற்றி வாழ்த்திப் பணியாற்றும் அடியாரிடத்தும் உண்மையான அன்பு பூண்டு, அத்தகைய அரனடியார் குறிகள் எங்கெங்கு காணப் பெறுகின்றனவோ ஆங்காங்கெல்லாம் காயத்தானும், வாக்கானும், மனத்தானுங் குறையாது முறையோடு வேண்டும் பணிகளை யாற்றுவா னென்பது தோன்ற, 'பொய்யடிமையில்லாத புலவ'ரென்றுந் தொகையடி யாருக்குப்பின் முறையே 'பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன், பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியே'னென்று தொகுத்துத் திருத்தொண்டத் தொகை விளக்கா நின்றது.

பொய்யடிமை யில்லாத புலவனாய், பத்தனாய்ப் பணிந்து, பரமனையேபாடி, சித்தத்தைச் சிவன்பாலே வைத்து அந்தணத் தன்மையைப் பெற்றவரே இறைவனது மாறாத் திருவருளின்பத்தில் திளைத்துப் பேரின்பநிலையையெய்துவர். இவ்வகையில் நின்று முடிந்த முடி வினையடைய, உயிரோடு இயல்பாயிணைந்து விளங்கும் ஆணவமும், அதன் வழித்தோன்றும்செயல் பயனையாக்குங் கன்மம் மாயையு மாகிய மும்மலச் சேட்டையையுங் கழியுமாறு செய்யவல்லது மண்ணெனும் பெரும்பூதத்தினிடையே யாகும். இதன் வழித் தோன்றியே வினை மாசுகளைக் கழித்தல் வேண்டும். மண்ணிடைத் தோன்றிய எல்லா வுருவங்களுள்ளும் மனிதத் தன்மையைப் பெற்ற வுருவமே சிறந்ததாகும். இதனால் இம்மண்ணிடை மனிதப் பிறப்பை யெய்துதலே சிறந்த நல்வினைப் பயனென்பர். இம்மண்ணிடை மனிதப் பிறவியை யடையாது புலமை, பக்தராய்ப் பணிதல், பரமனையே பாடுதல், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தல், அந்தணத்மையைப் பெறுதல், இறைவனது இன்ப நிழலடியிலிருத்தல் கூடாமையால் இவைகளுக்கு முன்னணியாகிய மனிதப் பிறப்பினையும் அது காணுமிடமாகிய மட்பூதத்தினையும் அடைதல் வேண்டு மன்றோ? இதனாற்றான் ஐம்பெரும் பூதக் கோயில்களுள் மட்பூதக் கோயிலாகிய ஆரூரையும், அவ்விடத்தே தோன்றும் மனிதப் பிறவியை யடைந்த உயிர்களையுங் கண்டு தெளியுமாறு 'திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியே'னெனத் திருத்தொண்டத் தொகை அடுத்து விளக்கா நின்றது.



கரும வினைகளைக் கழிக்கக் கடவதாகிய மனிதப் பிறப்பை யடைந்து, பொய்யடிமை யில்லாத புலவனாகிய, பத்தராய்ப் பணிந்து, பரமனையே பாடி, சித்தத்தைச் சிவன் பாலே யிருத்தி, அந்தணத் தன்மையைப் பெற்றோர்பூதகாரியமாகிய சரீரத்தினை விடுமளவும் புறத்தேயும் அகத்தேயும் முழுமுதற் கடவுளின் உருவத்திருமேனியை எக்காலமும் வணங்கி வழிபாடு செய்வர். இங்ஙன மிருந்து வரும் அந்தணர்கள் மாசுகளைந்து தூய்மையைப் பெற்று விளங்குவர். இத்தகைய தூய தன்மையைப் பெற்றுளோமென அறிவுறுத்த, மலமெனக் காணும் பசுஞ் சாணத்தைப் பக்குவமாய்த் தீயிடைப் புடமிட்டெடுத்துப் பரிசுத்தமாக்கித் தூய்மையான வெண்ணிறத்தையுடையதாகிய திருநீறெனப் போற்றும் விபூதியைஇறைவனது உண்மை நிலைமையயுங் காட்ட அன்போடு அங்கமெலாம் பூசி அகமகிழ்வர். இத்தகைய இறுதிச் செயலாகிய இடையீடில்லாத இறைவனது வழிபாட்டுடன் முழுநீறுபூசி விளங்குதல் வேண்டுமெனக் காணுமாறு, 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன் முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே'னெனத் திருத்தொண்டத் தொகையில் திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேனென்பதனை யடுத்துத் திகழவைத்தார் நமது நாவலூரார்.

இத்தகைய சீரிய நிலையிலுள்ளாரே தொண்டரென்றும் அடியவரென்றுங் கூறுநிற்பர். இத்தகைய அடியவர்தம் முள்ளத்தேயும், அவர்தம் செயலிலேயும், சொல்லிலேயும் காண்பதற் கரி

தாய் அறிவினா லுணர்ந்தறியத்தகும் இறைவனின் இருப்பும் செயலும் சொல்லும் முறையே காணப்பெறும். இதனாலன்றோ இறைபணியாற்றலினும் அடியார்பணி இன்றியமையாத தென்றும், பேரருள் பெற்றவரெல்லாம் அடியார் நடுவணிருக்க அருள்புரியுமாறு இறைவனை வேண்டி நின்றனர். ஆகையால் இத்தகைய அடியார்கள் எக்காலத்து முள்ளாரென்றும், அவ்வக்காலத்தே திகழு மடியாரவர்கட்கும் அடிபணிந்து ஒழுகல் வேண்டுமென்றுங் காட்ட இறுதியாக 'அப்பாலுமடி சார்ந்த வடியார்க்கு மடியே' னெனத் தொகையடியாரை முடித்துக் கூறா நின்றார்.

திருத் தொண்டத் தொகையின் தொகையடியா ரெண்பதின் மரைப் பற்றி இதுகாறும் ஆராய்ந்துழி :—

மண்ணினிற் பிறந்து தோன்றும் பல்வேறு உருவங்களுள் மனிதத் தன்மையைப் பெற்ற வுருவம் ஒன்றே இறைவனதுண்மை நிலைமையை யறியவும், அவனது திருவருளாலே துன்பங்கலவாததும், இன்பங்குறையாததும் மாறாததும் அழியாததுமான பேரின்பப் பெருவாழ்வைப் பெறக்கூடு மென்பதைத் 'திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்கு மடியே' னென்பதினாலும்; இத்தகைய பேரின்பப் பெருவாழ்வினைப் பெறப்போதிய அறிவுவிளக்கமுறஉண்மையான நூல்களில் ஆழ்ந்த புலமையும், கற்றவாறு ஏற்கும் உலகவாழ்க்கையும், இறைவனிடத்தும் அடியாரிடத்தும் மாறாத அன்பு பூண்டு மனம் வாக்குக் காயத்தான் பணிந்துபாடி இருத்தி எக்காலமும் வழிபாடு செய்து, அந்தணத் தன்மை பெற்று, இந்நிலையில் நிற்கும் பிரமாந்தர்களாகிய அடியவர்களை அரனெனவே பாவித்தும் பணிபவர்களே தவறாது பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று நிற்பரென்பதை ஏனைய தொகை யடியார்களினாலுங் காணக் கூடு மென்பது தோன்றா நிற்கும்.

---

# திலகவதியார் சரிதத்தின் அரும்பொருள்கள்

[கிருஷ்ணவேணி யம்மாள்]

திலகவதியார் சரிதத்தில் இவ்வம்மையார் தேகம் வளர்வதைப் போன்றே, கல்வியும், அறிவும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது எனக் கூறினாம். இவ்விடயத்தைப் பின் அம்மையார் நடந்துகொண்ட வகையிலிருந்தும், அவர் கடைப்பிடித்து வந்த மேம்பாடான ஒழுக்க நெறியிலிருந்துமே தெரிந்துகொள்ளலாம். எங்ஙனமெனின், அம்மையார் நல்லறிவின் ஆராய்ச்சியில் முதிர்ச்சி பெறாதிருப்பின் அவர்வாழ்நாட்களில் அத்துணைச் சிறந்த ஒழுக்கத்தையும் மனோ வன்மையையும் பெற்றிருத்தல் கூடாத காரியமாகும். இவ்வறிவு முதிர்ச்சிக்குக் கல்வி கேள்வி இன்றியமையாது வேண்டப் படுவதாகும். ஆகவே அம்மையார் தம் தாய் தந்தையர்களின் முயற்சியினால் கல்வியையும், நற்கேள்விகளையுங் கற்றறிந்து சிறப்புற்றனர் எனத் தெற்றெனப் புலப்படுகின்றது. குழந்தைகள் நல்லொழுக்கத்திலும், கடவுட் பக்தியிலும் சிறந்து விளங்குவதற்கு அவர்களை இளமை தொட்டு



வளர்த்து வருகின்ற தாய் தந்தையர்களே காரணமாவர். அவர்கள் தம் மக்கட்கு நல்விடயங்களைச் சொல்லி வைப்பதுமாத்திரம் அத்துணைச்சிறந்ததாகாது. குழந்தைகட்குச் சொல்லிக் கொடுக்கும் விடயங்களைத் தாங்கள் முன் மாதிரியா யிருந்து அவர்கட்குச் செய்து காட்டவேண்டும். இதுதான் சொல்வதை விடக் குழந்தைகளின்மனதில் நன்றாகப் பதியும். இதனாற்றான் கல்லூரிகளில் பிள்ளைகட்குப் பிரகிருதி சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம் முதலிய சில பாடங்களை வாயாற் சொல்லிக் கொடுப்பது மாத்திரமேயன்றி அதற்கு வேண்டிய சிலபொருள்களையும் காட்டிச் செய்து காட்டுகின்றனர். இங்ஙனம் தாய் தந்தையர்கள் குழந்தைகட்குப் புத்தி புகட்டுவது மாத்திரமேயன்றித், தாங்களும்நல்வழியில் நடந்து வருவாராயின் குழந்தைகள் கூடியமட்டும் சிறந்த ஒழுக்கங் கொண் டொழுகுவார்கள். இதைக் குறித்தே தெய்வப் புலவர்,

“ தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத் தாற் காணப்படும் ”

எனக் கூறியுள்ளார்.

ஆகவே திலகவதியாரின் தாய் தந்தையர் நன்மார்க்கங்களைமேற்கொண்டு நடந்து வந்ததனால்தான், அம்மையாரும் நல்லொழுக்கங்களிற் சிறந்து விளங்கினர் எனத் தெற்றெனப் புலப்படுகின்றது.

திலகவதியார், தனக்கெனப் பெற்றோர்களால் நியமிக்கப்பட்ட கலிப்பகையார் யுத்தத்தில் இறந்துபட்டாரெனக் கேள்வியுற்றவுடன், தான் அவருடன் உயிர் துறக்கத் தீர்மானித்தனர் எனக் கூறினோம். இதன் சார்பாகச் சில விஷயங்களை ஆராய்ச்சி செய்யவேண்டி யிருக்கின்றது.

அம்மையாரைக் கலிப்பகையாருக்குக் கொடுக்க வேண்டுமெனத் தாய் தந்தையர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதன்றி மணம் முடியவுமில்லை. அன்றி அம்மையார் அவருடன் சில நாட்கள் பழகி, அவர் இயற்கைத் தன்மைகளையறிந்து, அதன் காரணமாக அவரையன்றி வேறொருவரையும் மணப்பதில்லையெனத் தீர்மானித்துக் கொள்ளவுமில்லை. அங்ஙன மிருந்தும், தன், இருமுது குரவரால் நிச்சயிக்கப்பட்டுத், தான் ஒருவாறு மனங்கொண்டதினாலேயே, அவரையன்றி வேறொருவரையும் மணத்தல் ஆகாதென்றும், அவர் இறந்தபோது தானும் இறக்க வேண்டுமென்றும் அம்மையார் தீர்மானித்தனரென்னில், இவர் கற்பின் திறத்தை என்னென்று கூறுவது ! அதன்றியும் அக்காலத்திருந்த நம் தமிழ்ப்பெண்மணிகள் நிலையற்ற உலக இன்பத்தில் எவ்வளவு அற்பஅவாவை வைத்திருந்தனர் என்றும், 'நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை' என்றவாறு மனத்தினால் ஒருவாறு நினைப்பினும் அம்முறையிலிருந்து நீங்குதல் கூடாதென்னுங் கொள்கையை எவ்வளவு உறுதியாய்க் கொண்டிருந்தனர் என்றும் தெள்ளிதின் உணரலாம்.

இன்னும் இவ்வாறு தான் உறுதியான நிலைமையைப் பெறுதற்கு, அம்மையாருக்குத் தக்க வயது இருந்திருக்கவேண்டுமல்லவா? இதனால் தற்காலத்தில் சில வகுப்பினரைப் பார்த்து வயது வந்து மணஞ்செய்யலாமென்னும் வழக்கமுறை ஏற்பட்டிருக்கின்ற ஏனைய வகுப்பினரும் பெண்களுக்கு மணத்தின் மகிமை யறியா

இளமையிலேயே மணம் முடித்து அவர்களை நீங்காத துன்பத்திலாழ்த்திக் கஷ்டப்படுத்துவதைப் போலன்றி அக்காலத்தில் கல்வியறிவு நிரம்பிய மங்கைப்பருவத்திற்குப் பிறகே பெண்களுக்கு விவாகஞ் செய்ததாகத் தெரிகின்றது.

திலகவதியார் கலிப்பகையாரின் இயற்கைத் தன்மைகளை யறியாமலே எங்ஙனம் அவரை மணந்து கொள்வதற்கு ஒருப்பட்டனர் என வினவுவார்க்குக் கூறுவாம். கடவுட் பக்தியிலும், அடியார் தொண்டிலும் சிறந்து விளங்கிஅறிவுடையோரையும், தொண்டரையுமே தனக்குரிய சுற்றத்தாரெனக் கருதி அவர்கள் மாட்டு அன்பு பூண்டொழுகி வந்த அம்மையார், கலிப்பகையாரும்சிவபிரானிடத்தும் தொண்டரிடத்தும் பக்தியையும், அன்பையும் செலுத்தும் இயற்கை வாய்ந்தவரென உணர்ந்தனராதலின் இத்தெய்வத் தொண்டே மற்றய நற்குணங்கட்கெல்லாம் காரணமாகுமென வறிந்து அவரை நேரிற் கண்டு பழகாதிருந்தும் அவரையே மணப்பதற்கு இசைந்திருத்தல் வேண்டும்.

அம்மையாரின் தாய் தந்தையர்களும், தம்மகளின் அருட்டிறத்தையும் கலிப்பகையாரின் மனப்பாங்கையும் நன்குணர்ந்தே இங்ஙனம் தீர்மானித்தனர் போலும். இத்தகைய அறிவிற் சிறந்த பெற்றோரை வாய்க்கப் பெற்ற பெண் மக்கள் தம் பெற்றோரின் கருத்தின்படி அவர்களால் குறிக்கப்பட்ட ஒருவரை மணந்து கொள்வது குற்றமாகாது. ஆனால் சில பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை மணமுடிக்கும்வரை அதிக அருமையுடன் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பினும் பொருளைக்கருதியோ, தாங்கள் செய்யவேண்டிய சீர்மைகள் குறைந்து விடுமென நினைத்தோ, மங்கைப் பருவத்திற்குப்பின் சில நாட்கள் வைத்திருப்பின் ஊரார் பழிப்பிற் கிடமாகுமெனவுன்னியோ விரைவில் மணம் முடித்துப் பார்க்க வேண்டுமென்னும் அவாவை முன்னிட்டோ, வயதானவர்களுக்கும், தன் மக்கள் இயல்புக்குத் தக்க ஒழுக்க வழக்கங்கள் அமையப்பெறாதவர்களுக்கும், பழிக்கஞ்சாத குடும்பத்தைச் சார்ந்தவர்கட்கும் தம் அருமைப் புதல்விகளை மணஞ் செய்து வைத்து, பின்னர் அவர்கள் படும் துன்பங்கட்கெல்லாம் அவர்களுடைய ஊழ்வினையே காரணமெனக் கூறுகின்றனர். இது எவ்வளவு வருந்தத்தக்க காரியமாகும். ஒரு காரியத்தை,

"எண்ணித் துணிக கருமக் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்றும்,

"நுண்ணிய கருமமும் எண்ணித்துணி"

என்றும் கூறியிருப்பதற்கேற்ப, முன்னர் நன்றாக ஆராய்ந்தறிந்து செய்தும் அதற்குக் குறை நேரின், அதை ஊழ்வினை யெனக் கூறுதல் வேண்டுமே யன்றிப் பின் வருவனவற்றை ஒரு சிறிதும் சிந்தியாமலும், கண்ணிற்கு நன்றாகப் புலப்படக் கூடியதையும் ஆராய்ந்து பாராமலும் அவசரப்பட்டுச்செய்துவிட்டு பழயவினை யெனக் கூறின் இது அறிவுடையோரால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகுமா, அன்றி தங்கள் மனதிற்குத்தான் திருப்தியுண்டாகுமா? அங்ஙனமாயின் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்,

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சி தன்
மெய் வருந்தக் கூலி தரும்"

என்றும்,



"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்றும் ஏன் கூறியிருத்தல்வேண்டும்? ஆனால் சில தாய் தந்தையர்கள் தங்களால் அறிந்து கொள்ள முடியாத வழியில் ஏமாற்ற மடைவது முண்டு. அவ்விடயத்தில் ஒருவரும் குற்றங் கூற முடியாது. அன்றியும், நம் பெண்மணிகள் ஒருவர் இயற்கைத் தன்மைகளை அறிந்து கொள்வதற்குத் திலகவதியாரின் அறிவின்திறத்தில் பத்திலொருபங்கேனும் பொருந்தப் பெற்றிருப்பாராயின் அவர்களே தங்களுக்கேற்ற கணவரைத் தேடிக் கொள்ளுதல் குற்றமாகாது. அங்ஙனமின்றேல் அதுவும் பெருந்துன்பமாக முடியும். இக் குறைபாடுகளினால் இக் காலத்தில் உயிருடன் வாழும் கணவன்மார்களால் கைவிடப்பட்ட எத்தனைப் பெண்கள் பரிதாப நிலைமையி லிருக்கின்றார்கள் என்பதை நினைக்குங்கால் நெஞ்சம் பிளவுபட்டு விடும்போலிருக்கிறது. அந்தோ! ஏழைக் குடும்பத்தி லிருக்கின்ற பெண்களை அவர்கள் நிலைமை தெரிந்தே முதலில் மணஞ் செய்து கொண்டு, பின் தாய் வீட்டில் தக்கசீர் செய்யவில்லை யென்றோ, அழகில்லை யென்றோ, படிப்பில்லையென்றோ, நாகரிகமாக நடக்கத் தெரியவில்லை யென்றோ, அவர்களை ஆதரிப்பார் ஒருவருமில்லையென அறிந்திருந்தும் கைவிட்டு விடுகின்றனர். ஆகவே தங்களைக் காப்பாற்ற அன்புள்ள சுற்றத்தாரும், போதிய பணமும், கல்வியும் இல்லாத மேற்கூறிய பெண்மணிகள் தங்கள் காலத்தை எங்ஙனம் கடத்தக்கூடும்? இதனால் சிலர் தங்கள் உயிர் போன்ற ஒழுக்கத்தையும் இழந்து உயிர் வாழ்கின்றனர். நம் நாட்டில் நடைபெறும் கொடிய காரியங்களில் ஒன்றாகிய இது பெண்கள் கூட்டத்திலிருந்து பழகுகின்றவர்களுக்கும், இத்துணைப் பரிதாப நிலையிலிருக்கும் பல பெண்களை நாடோறும் பார்க்கின்றவர்களுக்குமே புலப்படுமன்றி மற்றை யோருக்குத் தெரிதல் கூடாத காரியமாகும். இவ்வித அநுதாப நிலைகள், நூறு வருடங்கட்கு முன்னிருந்ததைவிட இப்போது அதிகமெனப் பெரியோர் சிலர் கூறக் கேட்கின்றோம். தற்காலத்து (அ)நாகரிகம், உண்டி, உடை, வாகனம் முதலிய வெளிப்பகட்டுகளில் நிலை பெற்றுள்ளதேயன்றிக் காருண்யம், சொன்ன சொல் தவறாமை,வாழ்க்கை நெறி முதலிய நல்லொழுக்கங்களிற் பொருந்தியிருப்பதைக் காண்பது மிக அருமையாயிருக்கின்றது. ஆதலால் நாகரிகம் என்பதற்கு உண்மையான பொருளை அறிவதற்கியலுவதில்லை.

கணவருடன் உயிர் துறக்கும் ஏனைக் கற்புடை மகளிரைப் போன்று ஏன் திலகவதியாரும் தன் கணவனுடன் உயிர் நீத்து உலகத்தில் புகழை நாட்டவில்லை என வினவுதல்கூடும். அதைச் சிறிது ஆராய்வாம்.

ஒரு மனைவியானவள் தன் கணவன் இவ்வுலக வாழ்க்கையை விட்டு நீத்த பின்னர், தனக்கேற்பட்டிருக்கும் பெரிய குடும்பத்தைத் தாங்குவதற்கு அஞ்சியோ, பிள்ளைகளை சரியான வழியில் முன்னேற்றமடையச் செய்வதற்குத் தக்க பொருள் வருவாயின்மையைக் கருதியோ, கணவனை இழந்த கைம்பெண் இவள் என, உலகத்தார்ச் சொல்லும் பழிச் சொல்லிற்குப் பயந்தோ, கணவனுடன் உயிர் துறந்த கற்புடைப் பெண்மணிகள் சுவர்க்கம் அடைவார்கள் எனக் கேட்டிருப்பத

னால் அதைப்பெற நினைத்தோ, கணவனுக்கும், தனக்கும் ஏற்பட்ட பிரிக்க முடியாத அன்பின் தொடர்பினாலேயோ, கணவன் இறந்த காலத்தில் அவள் அவருடன் உடன்கட்டையேறுதல் அல்லது வேறு விதமாய் உயிர் துறத்தல் முதலிய காரியங்களைச்செய்கின்றனள்.

ஆனால் கடைசியாகக் கூறிய அன்பின் முதிர்ச்சியினால் உடனிறத்தல் கணவன் இறந்து பட்டானெனக் கேட்டவுடன் தன்னை யறியாமலே உயிர் உடலிலிருந்து பிரிந்து போகுமாதலால், இதுவே எல்லாவற்றிலும் சிறந்ததெனவும், இது, தனக்குத் தானே உண்டாகின்றமையால் இதைத் தடுத்துக்கொள்ள ஒருவருக்கும் முடியாதென்றும் கூறலாம். இதைத்தான் அறு மாணமெனக் கூறுவர். இதைத் தவிர மற்றவைகளெல்லாம் ஒவ்வொரு பயனை ஒட்டியிருப்பதால் அத்துணைச் சிறப் புடைத்தாகா. அதன்றியும் கணவன் இறந்துபட்ட காலத்தில் மனைவியும் உயிர் நீத்தல் வேண்டுமென்பது இன்றியமையாத காரியமுமல்ல. இது இறைவனால் அங்கீகரித்துக் கொள்ளக்கூடியது மாகாது. அங்ஙனம் இறைவனுக்கு, மனைவியின் உயிரையும் நீக்கவேண்டுமென்னும் எண்ணமிருப்பின், அவள் முயற்சி யாதொன்றுமின்றி அவரே அதனைச்செய்து முடிப்பர். இவைகளைச் சிறிதுங் கூர்ந்து யோசியாமல் சிறு எறும்புக்கும் உயிர் கொடுக்க வன்மை யற்றவர்களாகிய நாம், எல்லாம்வல்ல முழுமுதற்பொருளால் கொடுக்கப்பட்ட அருமை உயிரைப் போக்கிக் கொள்ளுதல் ஒரு வாற்றானும் தகுதி யுடையதன்றாம். “அரிதரிது மானிடராதலரிது” என்றவாறு எல்லாப் பிறவியினும் மானிடப் பிறவியே மிகச் சிறந்ததாதலினாலும், ஆன்மலாபத்தை யடைந்து தன்னை உயர்த்திக்கொள்வதற்கு இப்பிறவியே முக்கிய சாதனமாதலினாலும் இதைப் பயனற்ற வழியில் அழித்துக் கொள்ளாமல், தன் பூர்வகன்ம வினையினால் கணவனைப் பிரிய நேர்ந்த காலத்தும் மனச் சீலமுடையராய், தனக்குரிய முக்கிய கடமைகளைப் பழுதறச் செய்வதிலும், பல்வகையிலும் உலகத்திற்கு நன்மைகளைப் புரிவதிலும் தன்னாலான உதவியைப் பிறர்க்கியற்றுவதிலும் தன்னைவிட்டுப் பிரிந்த தன் கணவனின் ஆன்மா தூய்மை யடைய வேண்டுமென இறைவனை இறைஞ்சுவதிலும், தன் ஆன்மா மேன்மையடைவதற்கேதுவாகிய அறிவு நூல்களைக் கற்று அதன்படி நின்றொழுக முயற்சி செய்வதிலும் தன் வாழ்நாளைப் பயன்படுத்துவதே நன்மையுடையதாகும். இதன்படியே திலகவதியாரும் முதலில் உயிர் துறக்க நினைத்தபோதிலும், தன் பின்னவருக்காக மனமிரங்கி, அவர் ஆன்மாவை உய்யச் செய்தது மாத்திரமே யன்றி, தானும் ஆன்மலாபத்தைப் பெறுவதற்காகிய தெய்வ கைங்கரியத்தை மனவுறுதியுடன் புரிந்து உலகத்தார் பயனடையக் கூடிய பல நன்மார்க்கங்களைக் கடைப்பிடித் தொழுகி இறைவன் திருவருட்பேற்றை யடைந்தனர்.

(தொடரும்)

187146


## அப்பர் தேவாரம்

ஏககாலத்தில் 10 புத்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புத்தகம் அதிகமாகக் கொடுக்கப்படும். 50 புத்தகங்கள் வாங்குவோருக்கு ரூபாய் ஒன்றுக்கு இரண்டணா விதம் கழிவு தரப்படும். தனிப்பிரதி ராப்பர் அணா 10. கலிகோ அணா 12. தபாற் செலவு முதலியன வேறு.

## சுந்தரர் தேவாரம்

ஒரே காலத்தில் 5 புத்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புத்தகம் அதிகமாகக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு. தனிப்பிரதி ராப்பர் விலை அணா 4.

ஷை நூல்கள் 1930௵ ஆகஸ்ட்௴ 10௳ முதல் செப்டம்பர்௴ 15௳வரையில் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:

விலாசங்கள் :—

| | |
|---|---|
| ருக்மணி குக்கர் கம்பனி, இராயபுரம், சென்னை. | முருகவேள் புத்தகசாலை, இராயபேட்டை, சென்னை. |

## திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை, ஆசிரியர் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதுபோல வரையப் பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்பு பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுளது.

| | | | |
|---|---|---|---|
| அறத்துப்பால் காலிகோ பையிண்டு விலை ரூபா | 3 | 4 | 0 |
| பொருட்பால் ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் ,, | 1 | 12 | 0 |

பண்டிதர் - கி. குப்புச்சாமி முதலியார்,

3/2, பிள்ளையார்கோயில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

## இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது

இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருணெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை யுணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அழுத அழுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இக்காலதேச வர்த்தமானம் வேண்டுஞ் செம்மைச் சீர்திருத்தங்கள் பல இந்நூற்கண் மிளிர்கின்றன. விலை ரூபா 1.

### கடவுள் காட்சியும் தாயுமானாரும்

இந்நூலின் திரண்ட கருத்து மெய்ம்மையில் கடவுள்காட்சி பெறலாமென்பது. கடவுளின் அருட்டன்மையும், படைப்பு முறைகளும், படிகளும், படைப்பின் நோக்கமும், உயிர்களின் கடமையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பட்டிருக்கின்றன. விலை அணா 4.

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 2330. "SIDDHANTHAM"
Vol. 3—No. 9.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தில்

# விற்பனைக்குரிய புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" மலர் ஒன்று (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| "சித்தாந்தம்" மலர் இரண்டு (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| அப்பர் தேவாரம் காலிக்கோ ... | 0 | 12 |
| ஷை ராப்பர் ... | 0 | 10 |
| சுந்தரர் தேவாரம் ராப்பர் ... | 0 | 4 |
| சம்பந்தர் தேவாரம் காலிக்கோ ... | | |
| அப்பர் புகழ்மாலை ... ... | 0 | 2 |
| சுந்தரர் புகழ்மாலை ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும் ... | 0 | 2 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ... | 0 | 2 |
| திருக்குறள் விளக்கம்-அறத்துப்பால். | 3 | 4 |
| ஷை பொருட்பால். | 4 | 8 |
| ஷை காமத்துப்பால். | 1 | 12 |
| ஷை தொகுப்புரை. | 0 | 8 |
| புலால்மறுத்தலுக்கு 50 காரணங்கள் | 0 | 2 |
| சர்வமத சம்மதம் ... ... | 0 | 2 |
| திருநாளைப்போவார் தீக்குளித்ததேன் | 0 | 2 |
| நள்ளிரவில் நகர்க்காட்சி ... | 0 | 2 |
| கடவுள் ... ... ... | 0 | 2 |
| பண்மயத்த மொழிப்பாவை ... | 0 | 2 |
| சமயத்தின் சாரம் ... ... | 0 | 2 |
| சமய வளர்ச்சி ... ... | 0 | 2 |
| சுயமரியாதை சம்பாஷணை ... | 0 | 2 |
| திருஞானசம்பந்தர் (நாடகம்) ... | 0 | 8 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள் ... ... | 0 | 2 |
| சங்க நூல்களும் சைவமும் ... | 0 | 2 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர் | 0 | 8 |
| அறுசமயப் பகுதி ... ... | 0 | 2 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை ... ... | 0 | 4 |
| சிவஞானபோதம் ... ... | 0 | 2 |
| அஷ்டப்பிரகரணம் ... ... | 3 | 0 |
| சிவார்ச்சனை சந்திரிகை ... ... | 1 | 8 |
| சைவபூஷணம் ... ... | 1 | 0 |
| சைவ சித்தாந்த பரிபாஷை ... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் மூலமும் பொழிப்புரையும் ... ... | 2 | 8 |
| சிவஞான போதச் சிற்றுரை விளக்கம் | 3 | 8 |
| சர்வஞானோத்தரம் ... ... | 1 | 8 |
| தசகாரிய விளக்கம் ... ... | 0 | 8 |
| The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்) ... ... | 0 | 4 |
| ஆசார ஒழுக்கமுறை ... ... | 0 | 4 |
| சிவார்ச்சனைத் திருமந்திரம் ... | 0 | 1½ |
| திருக்குறட் சாரம் ... ... | 0 | 8 |
| ஷை (கலிக்கோ) ... | 0 | 10 |
| அக்ஷமாலிகோப நிஷத்து... ... | 0 | 2 |
| அதர்வசிகோப நிஷத்து ... ... | 0 | 2 |
| ஆலங்குடிப் பெருமை ... ... | 0 | 2 |
| பெரிய புராணம் (University Lectures) ... | 0 | 2 |
| ஒழுக்கம் ... ... ... | 0 | 4 |
| மரணத்தின் தன்மை ... ... | 0 | 4 |
| சிவஞானபோத விளக்கம் (ஒவ்வொரு சூத்திரமும் தனித்தனி) | 0 | 2 |

சுந்தரர் தேவாரம் மொத்தமாக வாங்குவோர்க்கு ரூபாய் ஒன்றுக்கு ஐந்து பிரதிகள் வீதம் கொடுக்கப்படும். மேற்கண்ட விலைகள் புத்தகக் கிரயம் மட்டுந்தான். தபாற்கூலி வேறு. பார்சல் செலவு, தபாற்கூலி, வி.பி. செலவு முதலியன வாங்கிவோரே செலுத்தவேண்டும்.

மேலேகண்ட அட்டவணையிலுள்ள புத்தகங்கள் தேவையாயின், சமாஜ ஆண்டுவிழா முதலிய கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் பெறலாம்; கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

---

## முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அழுத அழுகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும். திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணா 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.